பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

ரீ. வி, டெக், றேடியோ திருத்தவும் புதிய பாடல்களைப் பதிவு செய்யவும்
**எலெக்ரோ றெவ் - கூல் எஞ்சினியர்**
கொக்குவில் சந்தி, கொக்குவில்.
அத்துடன் வீட்டு மின்னிணைப்பும் செய்து கொடுக்கப்படும்.

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ 2/-

சிறந்த முறையில் குளிர் சாதனப் பெட்டிகள் குளிரூட்டிகள் திருத்திக் கொள்ள,
**எலெக்ரோ றெவ்-கூல் எஞ்சினியர்**
கொக்குவில் சந்தி, கொக்குவில். (6288)

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஸ்ரீ ஆவணி மீ 30 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1409 ஸபர் பிறை 3 (15 - 09 1988) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 184

## பதுளையில் இன்று ஊரடங்கில்லை

கொழும்பு, செப்.15

பதுளை மாவட்டத்தில் சடந்த செவ்வாயன்று பிறப்பிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் இன்று காலையுடன் நீக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

செவ்வாயன்று பதுளையில் இடம்பெற்ற பாணவர்—பொலீஸார் மோதலில் ஒரு மாணவன் துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்தது தெரிந்ததே. (ஒ-எ)

## திலகரத்ன கொழும்பில்

கொழும்பு, செப் 15

புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதர் பெர்னைட் திலகரத்ன சடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு திரும்பினார்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனவைச் சந்தித்து, இலங்கை நிலைவரம் பற்றிய பிரதமர் ராஜீவ் காந்தியின் சணிப்பை அவர் எடுத்துச் சொன்னார் என்று தெரியவருகிறது. (ஒ-எ)

## யாழ். நகரில் குண்டு வெடிப்பு

### இருவர் காயம்

யாழ்ப்பாணம், செப்.15

நேற்று யாழ்ப்பாணம் அடைக்கலமாதா ஆலயத்தின் முன் புறத்தில் சைக்கிளிலில் வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்று வெடித்ததில் இருவர் காயமடைந்தனர்.

காயமடைந்த இருவரும் உடனடியாக அமைதிப்படையினரால் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டனர்.

காயமடைந்தவர்கள் எஸ். பாஸ்கரன் [வயது 21] எஸ். ராஜரட்ணம் [வயது 51] ஆகியோராவர்.

இந்தக் குண்டு வெடிப்பதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர் இவ்வழியாக இந்திய மத்திய ரிசேர்வ் பொலீஸார் ரோந்து சென்றதாசக் கூறப்பட்டது. (ஒ-9)

## நெல்லியடியில் சோக கீதம்

வடமராட்சி, செப். 15

தமிழீழ விடுதலைப் புலிகளின் நெல்லியடிப் பொறுப்பாளர் குகனின் மரணத்தை அடுத்து நெல்லியடி எங்கும் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டு கடைகள் யாவும் பூட்டப்பட்டிருந்தன.

ஒலிபெருக்கிகளில் சோக கீதங்கள் ஒலித்த வண்ணம் இருந்தன. (ஒ-160)

## வவுனியாவில்

கடந்த மாதம் 8 ஆம் திகதி முதல் முழுமையாகப் பூட்டப்பட்டிருந்த வவுனியா நகர வங்கிக்கிளைகள் திங்கட்கிழமை முதல் செயற்படத் தொடங்கியுள்ளன.

விடுதலைப் புலிகள் சிவில் நிர்வாகச் சீர்குலைப்பு நடவடிக்கைகளைத் தளர்த்தியுள்ளதைத் தொடர்ந்தே வங்கிகள் இயங்கத் தொடங்கியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-164)

## செய்திச் சாரம்

## 6 ஜவான்கள் மரணம்

வவுனியா, செப்.15

சடந்த செவ்வாயன்று காலை புளியங்குளம்–நெடுங்கேணி வீதியில் சன்னாசி பரந்தன் பகுதியில் இடம்பெற்ற சண்ணி வெடி சம்பவம் ஒன்றில் ஆறு இந்தியப் படை ஜவான்கள் கொல்லப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து இப்பகுதியில் பலத்த தேடுதல் நடைபெற்றது.

கொல்லப்பட்ட ஆறு ஜவான்களில் இரண்டு பேர் அதிகாரிகள் என்று இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது, (ஒ-எ-164)

## தெற்கில் ஹர்த்தால் வெற்றி

யாழ்ப்பாணம் செப் 15

தென் பகுதியில் ஜே. வி. பியினர் ஏற்பாடு செய்த ஹர்த்தால் பூரணமாக வெற்றியளித்தது.

இவ்வாறு நேற்று கொழும்பிலிருந்து வந்த ஒருவர் உதயனுக்குத் தகவல் தந்தார்.

மேலும் பதுளையில் பொலீஸாரின் சூட்டுக்கு மாணவன் ஒருவன் உயிரிழந்ததை அடுத்து சென்பகுதியில் பதற்றம் நிலவுவதாகவும். ஆங்காங்கே மாணவர்களும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடக் கூடிய சாத்திய கூறுகள் தென்படுவதாகவும் அவர் மேலும்கூறினார். (ஒ-9)

## அஞ்சலி சுவரோட்டிகள்

யாழ்ப்பாணம், செப் 15

அண்மைக்காலங்களில் இடம்பெற்ற மோதல்களின்போது மரணித்த விடுதலைப் புலிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலான சுவரொட்டிகள் யாழ் மாவட்டத்தில் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன.

சுவரொட்டிகளில் முரளி, காந்தி, சிறீ, ஜெச்சா, கட்டைக் காந்தி, நவாஸ், அனஸ், தாமு, கலியுகன், சுரேஸ், பஞ்சன், அமுதன், மகாலிங்கம், ரவி ஆகியோரின் படங்களும் இடம்பெற்று இருந்தன. (ஒ)

## போக்குவரத்து வழமைக்கு திரும்பியது

யாழ்ப்பாணம், செப் 15

கடந்த மூன்று நாள் ஸ்தம்பிதத்தின் பின் நேற்று யாழ்- கொழும்பு பஸ் சேவை வழமைக்குத் திரும்பியது.

வடக்கு - கிழக்கு மாகாண இணைப்பு பிரகடனத்தை எதிர்த்தும், சட்டத்தரணி விஜேதாச லியனாராச்சி தடுப்புக் காவலில் இருக்கும்போது (8ஆம் பக்கம் பார்க்க)

### ஆயுதங்களை ஒப்படைத்து தேர்தலில் பங்குபற்றச் செய்வதற்காக

# இன்று காலை 7 மணி முதல் ஐந்து நாள் யுத்த நிறுத்தம்

## இந்திய அரசு நேற்று அறிவித்தது

புதுடில்லி, செப்டெம்பர் 15

**இன்று காலை ஏழு மணி முதல் ஐந்து தினங்களுக்கு இந்திய அமைதிப்படை யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ளும். புதுடில்லியில் இது உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டது.**

யுத்த நிறுத்தம் பற்றிய ஏனைய நடவடிக்கைகள் பற்றி இந்திய அமைதிப்படைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஏ. எஸ். கல்கத் பிறகு அறிவிப்பார் என்று புதுடில்லி அரசு அதிகாரி தெரிவித்தார்.

தேர்தலில் பங்கு ஏற்கவிருக்கும் எல்லாத் தமிழ்க் குழுக்களும் ஆயுதங்களை ஒப்படைக்கவும் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை ஆதரிக்கவும் இந்த யுத்த நிறுத்தம் வாய்ப்பளிக்கும் — என்று அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் மக்களின் நலனுக்கு இந்த யுத்த நிறுத்தம் வாய்ப்பளிக்கும் என்றும் அந்த அரசு அதிகாரி சொன்னார்.

ஐந்து நாள் யுத்த நிறுத்தம் பற்றிய தகவலை வெளியிட்ட அந்த அதிகாரி மேலும் சொன்னதாவது;

சல மாகாணசபைகளின் தேர்தல்கள் முடிந்தவுடன் கூடுதல் அதிகாரங்கள் மாகாணசபைகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி ஜெயவர்த்தன அறிவித்திருக்கி [8ஆம் பக்கம் பார் ]

## விடுதலையான 113 பேருடன்

### இன்று வருகிறது கப்பல்

யாழ்ப்பாணம், செப்.15

பூஸாவிலிருந்து விடுதலையான 113 பேரை ஏற்றிக்கொண்டு இந்தியக் கடற்படைக் கப்பல் ஒன்று காங்கேசன்துறை முகத்தை இன்று வந்தடைய உள்ளது.

இந்தக் கப்பல் இன்று காலை 9 மணியளவில் காங்கேசன்துறையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை-இந்திய செஞ்சிலுவைச்சங்க மருத்துவர்கள் அவர்கள் அனைவரையும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துவர்.

பின்னர் அரசாங்க அதிகாரிகளினால் அவர்களுக்கு மதிய போசனமும் வழங்கப்பட உள்ளது.

பின் வடபிராந்திய போக்குவரத்துச்சபைக்குச் சொந்தமான பஸ்கள் மூலம் இவர்கள் தத்தம் பகுதிகளுக்கு அனுப்பிவைக்கப்படுவர்.

## முச்சந்தி முரளி



அப்படியென்டா ஒரு அஞ்சு நாளைக்காவது உந்த தேடுதல், சுற்றி வளைப்புகளுக்கு ஓய்வு கிடைக்குமோ பின்னை...!

# ஜே. வி. பி. - அரசாங்கம் இணக்கம் வருமா?

## தமிழ் அரசியல்வாதி தூது

— உதயன் கொழும்புச் செய்தியாளர் —

கொழும்பு. செப் 15

இலங்கை அரசாங்கத்துக்கும் ஜே. வி. பி. இயக்கத்தினருக்கும் இடையே உத்தியோகப் பற்றற்ற முறையில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவதாகத் தெரியவருகிறது.

இந்தப் பேச்சுவார்த்தைகளுக்கு மத்தியஸ்தராக கொழும்பில் உள்ள தமிழ் அரசியல்வாதி ஒருவர் செயற்படுகிறார்.

ஜே. வி. பி.யின் முன்னணித் தலைவர்கள் சம்பந்தப்பட்ட தமிழ் அரசியல் வாதியை அடிக்கடிச் சந்தித்தனர் என்று அறியவருகிறது.

தங்கள் மேல் உள்ள தடையைப் பூரணமாக நீக்கினால்—

தாங்கள் சுதந்திரமாக நடமாடி, ஜனநாயக தேர்தல் முறைகளில் பங்குபற்ற சந்தர்ப்பமளிக்கப்பட்டால் - தாங்கள் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என்று கூறினார்களாம்.

தடைநீக்கம் பெயரளவில் மட்டும் இருக்கக் கூடாது என்பதையும் வலியுறுத்தினார்கள்.

சென்ற தடவை செய்யப்பட்ட போலி ஒப்பந்தத்தின் பேரில், தங்கள் மீதான தடை பெயரளவில் நீக்கப்பட்ட போதும், அதன் பின்னர் ஆயுதப்படையினரால் தங்களுடைய உறுப்பினர்கள் பெரும் எண்ணிக்கையில் கொல்லப்பட்டதை சுட்டிக் காட்டினார்களாம்.

இது சம்பந்தமாக அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை (8 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

15 - 09 - 1988
ஆவணி — 30
வியாழக்கிழமை

சுபநேரம்:
07.33முதல் 09.03வரை

ராகுகாலம்:
01.33முதல் 03.03வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
விநாயக சதுர்த்தி விரதம்

## தமிழ் மொழிச் சட்டம்

தமிழ் மொழியை உத்தியோக மொழியாக்கும் சட்டமும் விரைவில் அறிவிக்கப்படவிருப்பதாக புதுடில்லி அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## இன்று கும்பாபிஷேகம்

சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லூர் ஸ்ரீ கைலாசநாத பிள்ளையார் ஆலய ஜீர்ணோத்தாரண மஹா கும்பாபிஷேகம் இன்று நடைபெறுகின்றது.

காலை 7.00 மணிக்கு சகல ஸ்தூபி அபிஷேகமும் அதையடுத்து மூல மூர்த்திகளுக்கும் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கும் மகா கும்பாபிஷேகம் நிகழும்.

### சிறப்பிதழ்

4 ஆம் 5 ஆம் பக்கங்களில்

தொடர்ந்து ஆசார்ய சம்பாவனை, தச தர்சனம், மகா அபிஷேகம் என்பன நடைபெற்று ஸ்ரீ கைலாசநாத பிள்ளையார் திரு வீதியுலாக் காட்சியும் இடம்பெறும்.

## ஏழு நாட்களில் தேர்தல் அறிவிப்பு

கொழும்பு, செப் 15

வடக்கு, கிழக்கு மாகாணத் தேர்தலை நடத்தும்படி ஜனாதிபதி விடுத்த உத்தரவு கடந்த திங்கட்கிழமை தனது கைக்கு கிடைத்து விட்டதாக தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டீ சில்வா தெரிவித்தார்.

கிடைத்த தினத்தில் இருந்து அடுத்த ஏழு தினங்களுக்கு இடையில் வடக்கு - கிழக்கு மாகாண தேர்தல் பற்றிய அறிவிப்பைத்தான் வெளியிடவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (அ-எ)

### திலீபனின் நினைவாக

# இன்றுமுதல் 12தினங்களுக்கு துக்கதினம் அனுஷ்டிக்குமாறு

## விடுதலைப் புலிகள் அழைப்பு

யாழ்ப்பாணம், செப 15

திலீபனின் நினைவு வாரத்தை ஒட்டி இன்று பதினைந்தாம் திகதி முதல் 26 ஆம் திகதி வரையான 12 நாட்களை பூரண துக்க தினங்களாக அனுஷ்டிக்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் பொதுமக்களுக்கு துண்டுப் பிரசுரம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு "திலீபனின் கனவு நனவாகட்டும்" என்ற தலைப்பிலான துண்டுப் பிரசுரத்தை யாழ் நகரில் பரவலாக விநியோகித்தது.

இன்று 15 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரையான தினங்களில் சகல வங்கிகள், அரச கருமத் திணைக்களங்கள், படமாளிகைகள், மினி சினிமா அரங்குகள், மதுபான நிலையங்கள், யாவும் பூட்டப்பட்டிருக்க வேண்டும். கேளிக்கை நிகழ்ச்சிகள், ஆடம்பர நிகழ்ச்சிகள், கேளிக்கை வைபவங்கள், பொது இடங்களில் சினிமா பாடல்களை ஒலிபாப்புதல் போன்றவை யாவும் முற்றாக தவிர்க்கப்படல் வேண்டும் என்றும் அந்தத் துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தப் பிரசுரம் சகல அரச கருமத் திணைக்களங்கள், வங்கிகள், படமாளிகைகள் என்பனவற்றுக்கு விநியோகிக்கப்பட்டது.

14-9-88 திகதியிடப்பட்ட அந்தப் பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது:-

திலீபன் எதற்காக உண்ணாவிரதமிருந்து மரணத்தை வரித்துக் கொண்டானோ அத்தனை (8 ஆம் பக்கம் பார்க்க)

## பஸ் சேவை தடைப்படும்

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ்-கொழும்பு பஸ் சேவை நாளை 16 ஆம் திகதியும் நாளை மறுதினம் 17 ஆம் திகதியும் நடைபெற மாட்டாது.

யாழ் - மட்டக்களப்பு சேவையும் இன்று முதல் பதினேழாம் திகதிவரை மூன்று நாட்களுக்கு நடைபெற மாட்டாது.

யாழ் - திருகோணமலை பஸ் சேவையும் நாளையும் நாளைமறுதினமும் நடைபெறமாட்டாது எனவும் வடபிராந்திய போக்குவரத்துச் சபை அறிவித்துள்ளது.

தென் பகுதியில் நடைபெற்று வரும் அசம்பாவிதங்கள் பதற்றங்கள் காரணமாகவே இச் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக அறியவந்துள்ளது. (ஒ-10)

### விடுதலைப் புலிகளின்

## நெல்லியடிப் பொறுப்பாளர் சயனைட் உட்கொண்டு மரணம்

வடமராட்சி, செப். 15

நெல்லியடிப் பகுதி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பொறுப்பாளர் குகன் (நெடுஞ்செழியன்) சயனைட் உட்கொண்டு மரணமானார் எனத் தெரியவருகிறது.

இது பற்றிக் கூறப்படுவதாவது:—

கடந்த செவ்வாயன்று வல்வெட்டி வேவில் பிள்ளையார் கோவிலடியில் அமைதிப்படையினர் மேற்கொண்ட தேடுதலின் போது குகனும் அவரது சகாவான முகுந்தன் என்பவரும் பிடிபட்டனர் எனவும்-

அதை அடுத்து அவ்விருவரும் உடுப்பிட்டி அமைதிப்படை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர் எனவும்-

அங்கு வைத்து குகன் சயனைட் உட்கொண்டு உயிரை மாய்த்துக் கொண்டார் எனவும் தெரியவருகிறது.

அவரது சடலம் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் ஊடாக பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டு பெற்றோரிடம் கையளிக்கப்பட்டது. (ஒ-160)

## தேடுதல்

வடமராட்சி, செப், 15

வடமராட்சிப் பகுதியில் கடந்த சில நாட்களாக இடை நிறுத்தப்பட்டிருந்த தேடுதல் நடவடிக்கைகள், மீண்டும் ஆரம்பமாகி உள்ளன. (ஒ-160)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சுத்தமான சுகாதார முறைப்படி வெட்டிய புரொயிலர் கோழி இறைச்சி (Halal) விற்பனைக்கு உண்டு. தொடர்பு M.G M. & Stores, No. 777, K.K.S. Road, Jaffna. (6390)

பாவித்த வீட்டுத்தளபாடங்கள் Show Case, கட்டில், மெத்தைகள், விருந்தைக் கதிரைகள், Hall - Set, சாப்பாட்டு மேசைகள், Office மேசைகள், கண்ணாடி மேசை மற்றும் பல பொருள்களும் உடன் மிகவும் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. 326, பிரதான வீதி, (சென். பற்றிக்ஸ் சந்தியருகில்), யாழ்ப்பாணம். (6421)

தையல் மெஷின் (எலெக்ரிக்), பாவித்த டபிள், சிங்கிள் கட்டில் மெத்தைகள் மற்றும் சகல தளபாடங்கள், சாப்பாட்டு மேசை, விருந்தைக் கதிரைகள், கண்ணாடிமேசை, வீட்டுப்பாவனை ShowCase, சிறிய எலக்ரிக் குக்கர், சசற் றேடியோ, குசினிப் பொருள்கள், Baby Cot, Hall Set, Pyrex கிளாஸ் வகைகள், காரியாலய மேசை, Pram, மெஷின் உடன் விற்பனைக்குண்டு. 120. இராசாவின் தோட்டம் ரோட், யாழ்ப்பாணம். கராச் அருகில். (6433)

### கோழிக்குஞ்சு விநியோகம்

ஒரு நாள் Shetna B.380, Prima Lohmann Golden Comet, Hyline றெற்ரு பிறவுண், பேட்டுக் குஞ்சுகள் சேவற் குஞ்சுகள், புரையிலர், குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய் வெள்ளிக் கிழமைகளில் பெற்றுக் கொள்ளலாம், முன் கூட்டியே பதிவு செய்யவும். விபரங்களுக்கு 1. R.S.K. Farm, முருகபதி உடுவில். 2. குபேரன் ஸ்ரோர்ஸ். கொக்குவில் சந்தி, கொக்குவில். (6380)

### திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்த நாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C124)

### தேவை

உங்கள் எண்ணம் போல் கண்கவர் நிறங்களில் பற்பல டிசைன்களில் உத்தரவாதத்துடன் சிறந்த முறையில் ரெராசோ புளோரிங் (Terraso Flooring) (மாபிள் நிலம்) அமைத்துக் கொடுக்கப்படும். சதுர அடி 30 — 36 வரை தொடர்பு: N.P. லோகேஸ்வரன், No. 33 மூத்த விநாயகர் 1 ஆம் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, நல்லூர். (6151)

நல்ல நிலையிலுள்ள பாவிக்கக்கூடிய தையல் மெஷின், தட்டச்சு (Typewriter) உடன் தேவை. தொடர்பு கொள்ளவும். North Ceylon Technical Institute 14, St Peters Lane, Hospital Road, Jaffna (C192)

சாரதா இன்ஜினியேர்ஸ் ஒட்டுமடம்சந்தி, யாழ்ப்பாணம் மேற்படி ஸ்தாபனத்திற்கு பிற்ரேஸ்மேன், தொழில்நுட்ப பயிற்சியாளரும் உடன் தேவை. மேற்படி விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். (~~6456~~) (6506)

### வேலையாட்கள்தேவை

நன்கு அனுபவமிக்க பேக்கரி வேலையாட்கள் உடனடியாகத் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி- முருகன் பேக்கரி ஆடியபாதம் ரோட், கொக்குவில். (6507)

### மணமகன் தேவை

இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த 5' 3'' உயரமுள்ள பூச நட்சத்திர ஆங்கில ஆசிரியைக்கு Dr. சகோதரன் 36 வயதுக்கு மேற்பட்ட நல்ல பதவியிலுள்ள மணமகனைத் தேடுகிறார். வீடுவளவுடன் தகுந்த சீதனம் கொடுக்கப்படும். இல: 362 C/o உதயன், யாழ்ப்பாணம். (6502)

### தவறிவிட்டது

தங்கராசா கிருபா ஆகிய எனது அடையாள அட்டை இல. 655041273 V அராலிக்கும் வட்டுக்கோட்டைக்கும் சங்கானைக்குமிடையில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து அராலி வடக்கு, குலனையூர் (ஞான வயிரவர் கோயிலுக்கருகாமையில்) எனும் விலாசத்தில் ஒப்படைக்கவும். (6448)

### தவறிவிட்டது

பெரியசாமி அகிலாண்டம், ஐ. அங்கமுத்து ஆகிய எங்கள் இருவருடைய அடையாள அட்டைகளும் ஒன்ருக நல்லூர் கோயிலில் பூங்காவனம் அன்று தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (6442)

V. சிவராஜா, 246/10 K. K. S. Road, யாழ்ப்பாணம் ஆகிய எனது உடுப்புகள், சாதகம், வேறு பொருள்கள் அடங்கிய Travelling bag ஒன்று 12-9-88 அன்று வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு 2 மணியளவில் புறப்பட்ட வான் ஒன்றில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் அல்லது மேற்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (6508)

### பதவி உயர்வு

யாழ்ப்பாண கல்விக் கந்தோர் நிர்வாக அதிகாரியாகக் கடமையாற்றும் திரு. கே. சந்திரராசா கிளிநொச்சி பகுதி உள்ளுராட்சி உதவி ஆணையாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். பொன்னாலையைச் சேர்ந்த இவர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி பழைய மாணவராவார் (ஓ-28)

## யாழ்/இராமநாதன் கல்லூரி பவளவிழா

இணுவில் சுன்ஞகம் யாழ்/இராமநாதன் கல்லூரியின் 75 ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாட உத்தேசித்துள்ளோம். இக்கல்லூரியில் கற்பித்த ஆசிரியர்கள் மற்றும் பழைய மாணவிகள் தயவு செய்து தமது தற்போதைய விலாசத்தை அதிபருக்கு அறிவிக்கவும். பெற்ருேர் நலன் விரும்பிகள் இவ்விழா சிறப்புடன் நடைபெற எமக்கு உதவிபுரியுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்ருேம். பழையமாணவர் கூட்டம் 19-9-88 திங்கள் பி. ப. 2.00 மணிக்கு நடைபெறும்.

ஸ்ரீமதி. குமாரசாமி
(அதிபர்)

(6446)

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
**திரு. வீரகத்தி சிவராசா அவர்கள்**
(சங்கானை பட்டின சபை முன்னைநாள் உப-தலைவர்: பிரபல வர்த்தகர்)

மறைவு: 15 - 08 - 1988 திதி: 15 - 09 - 1988


உன் திருஉடன் உருக்கி - எம்
உயர்விற்காய் ஒளி பரப்பி
வானுலகு ஏகிவிட்ட வள்ளலே !
நீ மறைந்து நாட்கள் பலவானாலும்
அனு தினமும் எம்மிதயக் கோயில் தனில்
என்றும் வாழ்வீர்

16-09-88இல் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி வைபவத்தில் கலந்து சிறப்பிக்கும்படி அனைவரையும் அன்புடன் அழைக்கின்ருேம்.

நன்றி

இங்ஙனம்
திருமதி சிவராசாவும் குடும்பத்தினரும்.
ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை. (6488)

# தான் கொண்ட இலட்சியத்துக்காக அண்ணல் காந்தி அடியொற்றி தன்னுயிர் ஈந்த தியாகத் தீபம் திலீபனுக்கு அஞ்சலி!



"மக்கள் புரட்சி வெடிக்கட்டும். தமிழீழம் மலரட்டும்"-
திலீபன் மரணப் படுக்கையில் இருந்து மக்களுக்கு விடுத்த கடைசிச் செய்தி.

- தமிழீழ மக்கள் சார்பில்

## உடன் வேலைவாய்ப்புகள்

☆ சவூதி அரேபியா

1) சமையல்காரர் (Cook)
2) உதவி சமையல்காரர் (Asst.Cook)
3) சலவைத் தொழிலாளர் (Loundry Men)
4) கூலியாட்கள் (Lobourer)
5) பேக்கரி தொழிலாளர் (Bakers)

☆ குவைத்

☆ கனரக சாரதிகள் ☆ வீட்டுசாரதிகள்

(கல்ப் லைசென்ஸ் இருப்பவர்க்கு முன்னுரிமை)

6 புகைப்படங்கள், பாஸ்போட், சாரதி அனுமதிப்பத்திரம், தகுதி சான்றிதழ் உட்பட நேரில் வரவும்.

☆ குவைத் ☆ சிங்கப்பூர்
(பணிப்பெண்கள்)

உடன் தொடர்பு முகவரி:
**46, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.**

## பகிரங்க ஏல விற்பனை

பண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான பின்வரும் வாகனங்களும் மற்றும் இயந்திரங்களும் 18-09-1988 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு மாதகல் ரோட்டிலுள்ள மொத்த விற்பனை நிலைய முன்றலில் பகிரங்க ஏலத்தில் விற்பனைக்கு விடப்படும். கீழ்க் குறிப்பிட்ட பொருட்களை சங்க வேலை நாட்களில் மொத்த விற்பனை நிலையத்தில் பார்வையிடலாம்.

லொறி — இன்ரநஷனல் இல. 24ஸ்ரீ3309
கார் — ஏ-40 இல. ஈவை 2306
மின் ஒட்டும் இயந்திரம் — 01 தனி (Welding Machine)
துவிச்சக்கர வண்டிகள் — 04 தனி
பாவிக்கப்பட்ட பழைய ரயர்கள் (லொறி, வான்)
நீரிறைக்கும் இயந்திரம் — மார்க் 12 - சிக்மா

லொறி, கார், மின் ஒட்டும் இயந்திரம் ஆகியவற்றுக்கு ஏலம் கேட்போர் ரூபா 25/- சங்கத்தில் மீளப் பெறமுடியாத வைப்பு இடப்படுதல் வேண்டும்.

ஏலத்தில் பெற்றவர்கள் முழுப் பணத்தையும் சங்கக் காசாளரிடம் கட்டி பற்றுச் சீட்டைக் காண்பித்துப் பொருட்களை உடன் வெளியில் எடுத்துச் செல்லல் வேண்டும். தவறின் அவரது கேள்வி நிராகரிக்கப்படும்.

மேற்படி ஏலத்தில் பெற்ற கூறு விலையை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ சங்கத்திற்கு உரிமையுண்டு. இவ் ஏல விற்பனை சம்பந்தமாக எவ் விடயத்திலும் சங்கத்தின் தீர்ப்பே இறுதியானதாகும்.

பொது முகாமையாளர்
பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கம்
பண்டத்தரிப்பு.

05-09-1988 (C-195)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமலையில் சிங்களவர் வாழும் பகுதியில்

# ஸ்ரீலங்கா இராணுவத்துடன் ஊர்காவல் படை கடமை

## தமிழர் மத்தியில் பயம், பீதி

திருகோணமலை, செப் 15

திருகோணமலையில் சிங்களவர்கள் வாழும் பிரதேசங்களில் சிங்கள ஊர்காவல் படையினர் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கன்னியாவுக்கு அப்பால் வில்கம் விகாரை என்னும் பகுதியில் ஊர்காவல் படையினர் சாரம், ஷேர்ட் அணிந்து கையில் துவக்குடன் காணப்படுகின்றனர்.

இதே போன்று அபயபுர, மகிந்தபுர ஆகிய பகுதிகளிலும் சிங்கள மக்கள் அகதிகளாகத் தங்கியிருக்கும் பௌத்த யாத்திரிகர் மடம், அதனை அடுத்துள்ள பகுதி ரயில் நிலையத்துக்கு அண்மையிலுள்ள 'தானியகம' என்னும் சிங்களப்பகுதி ஆகியவற்றிலும் ஆயுதம் தாங்கிய ஊர்காவல் படையினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த புதிய நடவடிக்கை தமிழர்கள் மத்தியில் பயத்தையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளது. (இ-150)

## காத்தான்குடிப் பகுதியில் விஷமிகள் செயலால் பிரமுகர்கள் படும் அவலம்

மட்டக்களப்பு, செப்.15

காத்தான்குடி பகுதியிலுள்ள சமூக, சமய, அரசியல் பிரமுகர்கள் சில விஷமிகளின் நடவடிக்கைகளினுல் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஆதரவு.

தமிழீழ விடுதலை புலிகளுடன் நெருக்கமான உறவு.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தஞ்சமளித்தல்.

இது போன்ற விடயங்களைக் குறிப்பிட்டு இந்தியப்படையினருக்கு அநாமதயக் கடிதங்கள் இப்பிரமுகர்கள் பற்றி அனுப்பி வைக்கப்படுகின்றனவாம்.

இந்நிலையில் இந்தியப் படையினரால் இவர்கள் விசாரணைக்காக அழைக்கப்படுகிருர்கள். வீடுகளும் சோதனையிடப்படுகின்றன.

அரசியல் காரணங்களுக்காக கொழும்பிலிருந்து சில விஷமிகள் இச்செயலில் ஈடுபடுகின்றனர் என்று தெரியவருகிறது.

இது தொடர்பாக அண்மையில் இப்பிரமுகர்கள் இந்தியப் படையின் இணைப்பதிகாரி பிரிகேடியர் ஐ. எம். தார் ஐ சந்தித்துப் புகார் செய்தனர். (இ-21)

### சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் பரிசளிப்பு விழா

புங்குடுதீவு, செப். 15

சர்வதேச சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை (புங்குடுதீவுப் பிரிவு) பரிசளிப்பு விழா புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

புங்குடுதீவு கோத்தணி அதிபர் திரு. ஏ. சி. நல்லையா விழாவுக்குத் தலைமை வகித்தார்.

பிரதம விருந்தினராக வட மாகாணம் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி கலந்து கொண்டார்.

டாக்டர் பேரின்பநாதன், திருவாளர்கள் நா. தர்மபாலன், எஸ். தர்மலிங்கம், இ. சற்குணநாதன் கா. நாகேந்திரன் ஆகியோர் சிறப்புரை வழங்கினர்.

டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி மாணவ மாணவிகளுக்கு பரிசில்களை வழங்கினுர். (இ-131)

### நாதஸ்வர வித்துவானுக்கு கௌரவம்

மண்டைதீவு, செப்15

அராலியூர் பிரபல நாதஸ்வர வித்துவான் கதிரவேலு இராமதாஸ் கடந்த நான்கு ஆண்டுகளாக மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலய மகோற்சவ காலங்களில் நாதஇசை மழை பொழிந்ததைப் பாராட்டி பொன்னுடை போர்த்தி, பட்டம் அளிக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டார்.

ஆலய அறங்காவலர் சபையும் மண்டைதீவு திருமுறைக்கழகமும் இணைந்து இந்த வைபவத்தை ஆலய தீர்த்த உற்சவ தினத்தன்று நடத்தின.

திருமுறைக்கழக தலைவர் திரு. க. மாணிக்கலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் ஆலய அறங்காவலர் திரு. க. இரத்தினசபாபதி நாதஸ்வர வித்துவான் கதிரவேலு இராமதாஸுக்கு பொன்னுடை போர்த்தினுர். (இ-88)


நல்லை ஆதீனமும்
''பல்லவி'' சஞ்சிகை நிர்வாகமும்
**உதயன் - சஞ்சீவி**
ஆதரவில் நடத்தும்

**தம்புரா பரிசு - இசைப் போட்டி**

**1988 - 1989**

**இளம் இசைக்கலைஞர்களுக்கோா அரியவாய்ப்பு**

I. போட்டிக்கான விண்ணப் முடிவுத் திகதி 30 - 09 - 1988
II. போட்டியாளர்கள் 01 - 11 - 88 அன்று 30 வயதிற்கு மேற்படாதவர்களாயிருத்தல் வேண்டும்.
III. தகைமை: வட இலங்கைச் சங்கீதசபையால் நடத்தப்படும் ஆசிரியர் தராதரப் பத்திரம் அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இராமநாதன் நுண்கலைத்துறை டிப்புளோமாப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.
IV. இசைப் போட்டிக்கான பாடத்திட்டம் ''பல்லவி'' ஆடி இதழிலே வெளிவந்துள்ளது.
V. முதல் தெரிவுப்போட்டி 1988 கார்த்திகை மாதம் நடைபெறும்.

சு. குணராஜா
க. நாகேஸ்வரன் M. A.
அமைப்பாளர்
(C-162)


### கல்வி அதிகாரிகள் குழு விஜயம்

புங்குடுதீவு, செப். 15

யாழ் கல்விக் காரியாலய உயர் அதிகாரிகள் குழு புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலயத்துக்குத் திடீர் விஜயம் மேற்கொண்டது.

திரு. குலசேகரம் தலைமையிலான இக் குழுவில் திரு. எஸ். செல்லத்துரை திரு. எஸ் நடராசா திரு. சி. புலேந்திரன் திரு. எஸ். சிவானந்தன் திரு. எஸ். சுப்பிரமணியம் திரு. கே. கணபதிப் பிள்ளை திரு. எஸ். ஆர். விசுவலிங்கம் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். (இ-131)

### அரச செலவில் சடலம் அடக்கம் செய்யப்பட்டது.

வடமராட்சி, செப். 15

கடந்த 7ஆம் திகதி புதன்கிழமை நாவல் மடத்தடியில் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்ட 40வயது மாது அடையாளம் காணப்படாததால் அரச செலவில் சடலம் அடக்கம் செய்யப்பட்டது.

சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நான்கு நாட்களாக வைக்கப்பட்டிருந்த பின்பு அப்பகுதி கிராம சேவகர் எஸ். ஞானசந்திரனின் முன் நிலையில் கருசம்பன் மயானத்தில் அரச செலவில் கடந்த திங்கட்கிழமை அடக்கம் செய்யப்பட்டது. (இ- 160)

### முறையிட்டும் பயன் இல்லை

கோப்பாய், செப். 15

இணுவில் கந்தசுவாமி கோயிலின் வடக்குப் புறமாகவும் தெற்குப் புறமாகவும் செல்லும் வீதிகள் ஒரே குன்றும் குழியுமாக காணப்படுகின்றன.

இது சம்பந்தமாக உடுவில் பிரதேச சபைக்கு பொதுமக்கள் அறிவித்தும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று

### விண்ணப்பம்

மட்டக்களப்பு செப் 15

இஸ்லாமிய நடவடிக்கை முன்னணியும் தன்னை அரசியல் கட்சியாக பதிவு செய்யுமாறு தேர்தல்ஆணையாளருக்கு விண்ணப்பித்துள்ளது (இ-21)

## நேர்மையான நெறியாளர் தெரிவு செய்யப்படவேண்டும்

### ப.நோ.கூ.ச. உறுப்பினர்மத்தியில்உரை

கொடிகாமம், செப் 15

ப. நோ. கூட்டுறவுச் சங்கப் பொதுஸ்தாபனங்களுக்கு அனுப்பப்படும் பொதுச்சபை உறுப்பினர்கள் பிரஸ்தாப சங்கக் கிளைகளின் உறுப்பினர்களிலிருந்து தெரிவு செய்யப்படுபவர்கள் ஆவர். எனவே கடந்த அக்டோபர் மாதம் நடைபெற்ற தவறுகளை சீர்தூக்கி நேர்மையும் பொது நோக்குமுள்ள நெறியாளர்களைத் தெரிவு செய்யக் கூடிய வகையில் பொதுச் சபைகள் அக்கறை கொள்ள வேண்டும்.

சாவகச்சேரி ப. நோ. கூட்டுறவுச் சங்கத்தின் மீசாலை கிளையின் உப குழுவினர் மத்தியில் பேசும்போது சாவகச்சேரி ப. நோ. கூ. சங்க முன்னுள் தலைவர் ஆசிரியர் திரு. த. சிதம்பரப்பிள்ளை இப்படிக்கூறினுர்.

தென்மராட்சியில் உள்ள ப. நோ. கூ. சங்கக் கிளைகள் சில வெறிச்சோடிக்காணப்படுகின்றன. நெறியாளர் வெகு ஆவலுடன் வருவார்கள் ஆனுல் சங்க வளர்ச்சியில் அவர்கள் அக்கறை காட்டுவதில்லை.

இப்படியான குறைகளைக் கண்டுபிடிக்கக் கூடிய திறமை வாய்ந்த நெறியாளர்களை தென்மராட்சி மக்கள் கண்டு பிடிக்க வேண்டும்.

இப்படி அவர் மேலும் சொன்னுர். (இ-75)


**UNIVERSITY OF JAFFNA**
**Sri Lanka**

Applications will be received by me from suitable candidates for the post of PROFESSOR OF STATISTICS up to 7th October, 1988.

Application forms and particulars for the above post should be obtained from this Office.

Request for application forms for the above post should be accompanied by a self-addressed stamped envelope of 23 x 10 c.m. in size.

N.B. Those who have applied earlier need not apply, as those applications will be taken into consideration.

REGISTRAR
University of Jaffna,
Sri Lanka,
Thirunelvely,
Jaffna.

6th September, 1988.
(C 155)


### அதிபர்களுக்குப் பயிற்சி வகுப்புகள்

பருத்தித்துறை,செ.15

அதிபர் தரம் I, II, III க்கான பயிற்சி வகுப்புக்கள் வார இறுதி நாட்களில் திரு. இருதயக் கல்லூரியில் நடைபெற உள்ளன.

பங்குபற்ற விரும்பும் ஆசிரியர்கள்உடுப்பிட்டிக் கிளைத் தலைவர் திரு. சி. வின்செண்ட், திருஇருதயக் கல்லூரிகரவெட்டி என்ற முகவரியுடன் இம்மாதம் 20ஆம்திகதிக்கு முன்னர் தொடர்புகொள்ளுமாறு கோரப்படுகின்றனர். (இ)

### இலவசம்

சாவகச்சேரி, செப் 15

சாவகச்சேரி, நுணுவில் மேற்கு அருள்மிகு ஸ்ரீதுர்க்கை அம்மன்தேவஸ்தானம் புரட்டாசிச்சனி விரதத்தை முன்னிட்டு நவக்கிரக தோத்திரத்தை அச்சிட்டு இலவசமாக வழங்கிவருகிறது. (இ-31)

## தெய்வீக சக்தி வாய்ந்த ஆயுதம் திருவாசகம்

கொடிகாமம், செப் 15

மாணிக்கவாசகப் பெருமான், பரமசிவன் திருவருள் கொண்டு திருவாய் மலர்ந்த திருவாசகம் மக்களுக்கு அரும் பெரும் துணையாக உள்ளது. மக்களை எதிர் நோக்கும் குண்டுகள், துப்பாக்கிகள், ஷெல் அடிகள் அத்தனையையும் புறங்காட்டச் செய்யும் தெய்வீக சக்தி வாய்ந்த ஆயுதம் திருவாசகம்:- இதனை ஆலயங்களில் மட்டுமன்றி இல்லங்கள் தோறும் தினமும் ஓதி வந்தால் இப்போதைய கெடுபிடிகளிலிருந்து மீள முடியும்.

சாவகச்சேரி உழுத்தம்புலம் பிள்ளையார் கோவிலில் தென்மராட்சி சைவ மகாசபை சார்பில் நடைபெற்ற திருவாசக முற்ரோதலில் மகாசபை இணைச் செயலாளருள் ஒருவரான சர்வதேச பக்தி நெறிக்கழக உறுப்பினர் சைவப்புலவர் திரு. கு. வி. மகாலிங்கம் இப்படிக் கூறினுர்.

இசைப்புலவர் சபையின் உப தலைவர் திரு. சி. செல்லத்துரை உட்பட சைவ மகாசபை உறுப்பினர்கள் பலரும் திவ்யஜீவன சங்க உறுப்பினர்களும் வைபவத்தில் கலந்து கொண்டனர்.

மகேஸ்வர பூசையும் நடைபெற்றது. (இ- 75

### கோயிலுக்கு தண்ணீர் வசதி

பண்டத்தரிப்பு, செப் 15

வட்டுக்கோட்டை அடைக்கலந்தோட்டம் கந்தசுவாமி ஆலயத்துக்கு தண்ணீர் விநியோக வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வைத்திய கலாநிதி கே. குகதாசன் இதற்கான உதவிகளைச் செய்து வருகிருர். [இ-120

திலீபனின் நினைவாக

## இன்று தொடக்கம் தியாக தினம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், செப் 15

தியாகி திலீபனின் ஓராண்டு நினைவு தினத்தை முன்னிட்டு குடாநாட்டின் பல பகுதிகளிலும் இன்று 15 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை தியாகத் தினங்களாக அனுஷ்டிக்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை சகல பகுதி பிரசைகள் குழுக்களும் அன்னையர் முன்னணியினரும் மேற்கொண்டு வருகின்றனர்.

நல்லூர் கந்தசாமி கோவில் முன்றலில் இன்று முதல் 26 ஆம் திகதி வரை காலை எட்டு மணிமுதல் பிற்பகல் 4 மணி வரை அடையாள உண்ணுவிரதம் அனுஷ்டிக்கப்பட உள்ளது.

இத் தினங்களில் இல்லங்களில், அரச கூட்டுத்தாபனங்களில், தனியார் ஸ்தாபனங்களில் கறுப்புக் கொடிகளைப் பறக்க விடுமாறும், பாடசாலை மாணவர்கள், ஊழியர்கள், தொழிலாளர்கள் அனைவரும் கறுப்புப் பட்டிகளை அணிந்து செல்லும்படி பிரசைகள் குழுவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை வடக்கு-கிழக்கு தமிழ் பேசும் மக்களும் பொது ஸ்தாபனங்களும் குறிப்பிட்ட தினங்களில் ஆடம்பர நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்வதையோ அவைகளில் பங்குபற்றுவதையோ தவிர்த்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

### சித்தன்கேணியில்

வட்டுக்கோட்டைத் தொகுதியில் உள்ள பிரசைகள் குழுக்கள் சார்பில், அவை எடுத்த முடிவுக்கு இணங்க சித்தன்கேணி கணபதிப் பிள்ளையார் கோயில் முன்றலில் இன்று வியாழக்கிழமை ஒரு நாள் உண்ணுவிரதம் அனுஷ்டிக்கப்படும்.

பிரசைகள் குழுக்களின் சாத்வீகப்போராட்டத்தின் மூலம் தமிழ் இனத்தின் விடுதலைப் பாதையில் ஏற்படுத்திய உலக சாதனையை நினைவு கூரும் முகமாக சாத்விக வாரம் கொண்டாடும்படி விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும் ஆதரவு தெரிவித்துள்ளது.

இக்காலப் பகுதியில் பாடசாலைக்குச் செல்லும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் கறுப்புப் பட்டி அணிந்து ஆதரவு தெரிவிக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

### வடமராட்சியில்

வடமராட்சியிலும் தியாகி திலீபனின் ஓராண்டு நினைவை முன்னிட்டு நேற்று முதல் சகலரும் கறுப்புப் பட்டி அணியவும் வாகனங்களிலும் வீடுகள் அலுவலகங்களிலும் கறுப்புக் கொடிகளைப் பறக்க விடவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

இக் கோரிக்கையை வடமராட்சி மாணவர் ஒன்றியம் விடுத்துள்ளது. (ஓ-10-70)


**University of Jaffna**
SRI LANKA

**Extension Course**

Application will be received by me from suitable candidates for the following posts in the Computer Unit, University of Jaffna, upto 25 September, 1988

i) Visiting Lecturer
ii) Visiting Instructor

Application forms and the particulars for the above posts sh uld be obtained from this office.

Request for application forms for the above posts should be accompanied by a self addressed stamped envelope of 23 x 10 cm in size to Assistant Registrar, Faculty of Science, University of Jaffna, affna..

Assistant Registrar,
Faculty of Science,
University of Jaffna

C / 194


கிளிநொச்சியில்

## பகிர்ந்தளிக்கப்படும் தண்ணீர்போதாதெனபுகார்

வட்டக்கச்சி, செப். 15

கிளிநொச்சிப் பகுதியிலுள்ள இரணைமடுக்குளம், கல்மடுக்குளம், அக்கராயன்குளம், வன்னேரிக்குளம் ஆகியகுளங்களிலிருந்து இம்முறை சிறுபோக நெற்செய்கைக்கு ஒரு விவசாயி [illegible] பத்கூடிய நீரே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

ஆனுல் இக்குளங்களில் ஒரு விவசாயி ஒன்றரை ஏக்கர் நெற்பயிர் செய்யக்கூடிய நீர் இருக்கிறதென்றும் வாய்க்கால் வழியாகத் தண்ணீர் விரயமாகிக் காட்டுக்குள் போகிறதென்றும் கிளிநொச்சிப்பகுதி விவசாயிகள் [illegible] தெரிவித்தனர். (இ-ச-ரி)

## திருமலைத் தமிழ் ஊழியர் கடமைக்குச் செல்ல மறுப்பு

### போதியபாதுகாப்பு இல்லாததே காரணம்

திருகோணமலை, செப் 15

திருமலைக் கச்சேரியில் கடமை புரியும் தமிழ் அரசஊழியர்கள்சென்ற புதன்கிழமை முதல் கடமைக்குச் செல்லவில்லை. முன்னர் தீர்மானித்தபடி போதிய பாதுகாப்புவழங்காததே இதற்குக் காரணம்.

இதுவரையும் அவர்கள் பஸ்சில் சென்று கச்சேரி வாசலில் இறக்கி விடப்பட்டனர். பஸ்சில் சென்று வரும் போது எதுவித சோதனையும் இடம் பெறுவதில்லை.

அத்தோடு இந்தியப் பொலீஸார் பஸ்சில் சென்று வந்தனர். பஸ் நகரசபைக்கு முன்னுல் இருந்து புறப்பட்டுவந்தது.

ஆனுல் இந்த நடவடிக்கை எல்லாம் நிறுத்தப்பட்டுள்ளன.

புதிய ஏற்பாட்டின்படி பஸ்ஸில் இந்தியப் பொலீஸார் செல்லமாட்டார்கள். சர்வோதயச் சந்தியில் வைத்து இலங்கை இராணுவத்தினரால் சோதனையிடப்பட்டுத்தான் அனுமதிக்கப்படும் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சித்த போது ஊழியர்கள் வேலைக்குச் செல்ல மறுத்துவிட்டனர். (ஓ-150)


இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்
நடத்தும்
அதிபர் தரம் I - II - III பரீட்சைக்கான
**ஆயத்த வகுப்புக்கள்**

இடம் :- யா/வேம்படி மகளிர் கல்லூரி, (மண்டபம்)
காலம் :- 1988 செப்ரெம்பர் 17, 18, 24, 25 ஆம் திகதிகளும் 1988 ஒக்டோபர் 01, 02, 08, 09 ஆம் திகதிகளிலும் தினமும் காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகும்.

வடமாகாண கல்விப்பணிப்பாளர்
**திரு. வெ. சபாநாயகம் அவர்கள்**
மேற்படி வகுப்புக்களை 88-09-17 காலை 9-00 மணிக்கு சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைப்பார்.

மேற்படி போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்து இவ்வகுப்புக்கு வர விரும்பும் சகல ஆசிரியர்களும் 17-09-88 ஆம் திகதி காலை 7-30 மணிக்கும் 8-30 மணிக்கும் இடையில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்தல் அவசியம்.

நன்றி.

த. மகாசிவம்
இ.த.ஆ, சங்கம் பொதுச் செயலாளர்.
29, ஜும்மாபள்ளிவாசல் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (C-193)

**புதிய உயர் கல்லூரி**
A/L 89 ஆம் ஆண்டிற்கான
(சனி, ஞாயிறு)
1 வருட வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன

A/L 89 ஆண்டிற்கான
DAY CLASSES
ஆரம்பம் - 03 - 10 - 88

A/L 90 ஆண்டிற்கான வகுப்புகள்
ஆரம்பம் - 24 - 10 - 88

**SPOKEN ENGLISH**
with GRAMMAR
4 ஆம் பிரிவு வகுப்புக்கள் 03 - 09 - 88 ஆரம்பமாகிவிட்டது
விபரங்களுக்கு:
**S. அருள்நங்கை**
புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம்,
யாழ்ப்பாணம்.
(C-173)

**குவைத் வேலை வாய்ப்பு**

**ட்ரைவர்:**

நீண்ட ட்ரெயிலருடன் கூடிய பார வாகனம் ஓட்டக் கூடிய ட்ரைவர் தேவை.

**சம்பளம்: ரூபாய் 15,000/-**

★ ட்ரெயிலருடன் கூடிய ட்ராக்டர் ஓட்டுவதில் நல்ல அனுபவம் உள்ளவர்கள் மட்டும் நேரில் வரவும்.
★ 17-ஆம் திகதியும் 18-ஆம் திகதியும் நேரில் சந்திக்கவும்.

**சிவா**
6/3, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(6475)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஸ்ரீ கைலாசநாத பிள்ளையார் ஆலய மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்

## ஈழத்தில் தனித்துவம் மிக்க கும்பாபிஷேக நிகழ்ச்சி

இன்று நடைபெறும் கைலாசநாதபிள்ளையார் கோயில் மகா கும்பாபிஷேகம், மற்றைய ஆலயங்களின் கும்பாபிஷேகங்களைவிடத் -தனித்துவமானதாக- சிறப்பானதாக- அமைகின்றது.

இந்தியாவில் உள்ள- தொன்மையும், புகழும், புராண, இதிகாசவரலாற்றுச் சிறப்பும் மிக்க- ஆலயங்களின் சக்தி வ் தீர்த்த சம்ஜோஜனங்களாகக் கைலாசநாத பிள்ளையார் ஆலய மூலமூர்த்திகளுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும்சேர்க்கப்படுவது இந்த மகா கும்பாபிஷேகத்தின் தனிச்சிறப்பாகும்.

ஞானபூமியான இந்தியாவில் அமைந்துள்ள 108 சிவஸ்தலங்களின் சக்தியும், 51 சக்திப்பீடங்களின் சக்தியும், விநாயகருக்கு அஷ்ட கணபதி சக்தியும் இன்று தீர்த்த சம்ஜோஜனங்களாக கைலாச விநாயகருக்கும், கைலாச சிவனுக்கும், அபீதகுஜாம்பிகைக்கும் சேர்க்கப்படுகின்றன.

இவைதவிர நவக்கிரகங்களுக்கு நவபுண்யநதி தீர்த்தங்களும் வைரவருக்கு அஷ்டபைரவர் தீர்த்தங்களும் சேர்க்கப்படுகின்றன.

விநாயகரது மிகமுக்கிய புண்ணிய தலங்களாக பிள்ளையார்பட்டி, திருக்கோகர்ணம், நாகபட்டணம், திருவலஞ்சுழி, திருவேக்குடி, நிறம்மாறும் விநாயகர் கேரளபுரம், சுசீந்திரம், திருநாரையூர், காஞ்சிபுரம், ஓம்ஒலிதரும் விநாயகர், நாகபட்டினம், பஞ்சமுக விநாயகர், உப்பூர் வெயிலுகந்த விநாயகர், ராமர் பூஜித்த ராமநாதபுர விநாயகர் ஆகிய ஸ்தலங்கள் விளங்குகின்றன. இந்தத் திருத்தலங்களிலிருந்து இன்றைய கும்பாபிஷேகத்துக்காக புண்ணிய தீர்த்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. இவை கைலாசநாதப் பெருமானுக்கு இன்று சேர்ப்பிக்கப்படுகின்றன.

பிள்ளையார் பட்டியில் கற்பக விநாயகராகவும் திருக்கோகர்ணத்தில் மகா கணபதியாகவும், நாகபட்டணத்தில்நாகாபரணப் பிள்ளையாராகவும் திருவலஞ்சுழியில் வெள்ளைப் பிள்ளையாராகவும், கேரளத்தில் நிறம் மாறும் விநாயகர் எனவும், சுசிந்திரத்தில் பெண்பிள்ளையார் எனவும், திருநாரையில் பொல்லாப்பிள்ளையாராகவும் காஞ்சிபுரத்தில் ஓம் எனும் பிரணவ ஒலிதரும் கணபதியாகவும் நாகபட்டணத்தில் பஞ்சமுக விநாயகராகவும் திருவானை என்னும் உப்பூரில் வெயிலுந்த பிள்ளையாராகவும் இருக்கும் விநாயகரது அருட்சக்திகளை தீர்த்தங்கள் மூலம் கைலாசவிநாயகர் பாதகமலங்களில் சமர்பிக்கப்படுகின்றன.

சிவ பெருமானுடைய பஞ்சபூதஸ்தலங்களான சிதம்பரம் (ஆகாயம்),

(7 ஆம் பக்கம் பார்க்க)



1970 ஆம் ஆண்டு நிகழ்ந்த ஆலய மகா கும்பாபிஷேகக் கிரியைகள் நயினை சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் தலைமையில் இடம் பெற்றன. யாகபூஜை கிரியைகளின் போது கைலாசநாதக் குருக்கள். (உ)

## தந்தையும் தனயனும் ஒன்ருக எழுந்தருளி அருள்புரியும் தலம்

இ. ஸ்ரீதரன்

தனக்கு மேல் தலைவன் அதாவது நாயகன் இல்லாத தன்மையை உடையவர் என்பதால் விநாயகர் என்றும்-

கணங்களுக்கெல்லாம் பதியாக விளங்கும் தன்மையால் கணபதி என்றும்-

கணங்களுக்கெல்லாம் ஈசனாக இருப்பவர் ஆதலால் கணேசன் என்றும் பெயர் பெற்று விளங்குபவர் பிள்ளையார்.

விக்கினங்களைத் தீர்ப்பவர் விநாயகர். மூஷிகவாகனனாகத் திகழும் ஓங்கார ரூபியான விக்கினேஸ்வரர் தம்மை வழிபடும் அடியவர்களின் இன்னல் போக்கி இன்னருள் புரிவார்.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான், விநாயகனே வேட்கை தணிவிப்பான்; விநாயகனே விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனுமாய் விளங்குபவன்; அவனைக் கரம் கூப்பிச் சிரம் தாழ்த்தி வழிபட்டால் துன்பம் தூரப் போகும்.

ஐங்கரன், ஆனைமுகன், கணபதி, வேழ, முகத்தோன், பானை வயிறன், மூஷிக வாகனன், பிள்ளையார், கணேசன் என்றின்னோரன்ன பெயர்களால் அழைக்கப்பெறும் விக்னேஸ்வரன் நல்லூர் கைலாசநாதபிள்ளையார் கோயிலில் எழுந்தருளி- தம்மைச் சிந்தித்து நின்று சேவித்து வந்தித்து நிற்கும் மெய்யடியார்களுக்கு வேண்டும் வரமீந்து கைதொழுவார்களுக்கு கண்கண்ட தெய்வமாக மிளிருகின்ருர்.

இவ்வாலயத்தில் ஒரு

(7 ஆம் பக்கம் பார்க்க)


கணபதி தாள் பணிந்து
கை தொழுது
வாழ்த்துகின்ருேம்!

ஏற்றுமதி இறக்குமதியாளரும்
விற்பனையாளரும்

கே. கே. ஏ. கந்தையாபிள்ளை

உரிமையாளர்:
ஏ. கே. நடராஜா
316, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

எமது நிறுவனத்தில் பலவிதமான கலியாண அழைப்புக் கார்டுகள், புதுமனை புகுவிழா அழைப்புக்கார்டுகள், விருந்துபசாரக் கார்டுகள், மற்றும் அறிமுக அட்டைகள் அடிக்கும் கார்டுகள், பிறந்த தின அழைப்புக் கார்டுகள், காகிதாதிகள், எழுது கருவிகள், மின்சார உபகரணங்கள், அன்பளிப்புப் பொருள்கள் யாவும் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்பு;
அம்பலவாணர் அன் சன்ஸ்
196, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.

கைலாச பிள்ளையார் கும்பாபிஷேகம்
சிறப்புற வாழ்த்துகின்ருேம்.
திருமண வைபவங்களுக்கேற்ற
★ மணிப்புரி
★ காஞ்சிபுரம்
★ பனாறிஸ்
சேலைகள், பட்டு வேட்டி, சால்வைகள்
போன்ற சகலவற்றிற்கும்
★
பாலேந்திராஸ்
★
170, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

விநாயகர் கும்பாபிஷேகம் சிறப்புற
வாழ்த்துகின்ருேம்
நெஷனல் கறுப்பு வெள்ளை, கலர் T. Vக்களை
இரண்டு வருட உத்தரவாதத்துடன் விற்பனை
செய்யும் நாம் இப்போது
வாடிக்கையாளர்களின் நலன் கருதி
★ SAMSUNG ★ GOLD STAR
கறுப்பு வெள்ளை T V க்களையும்
குறைந்த விலையில் விற்பனை செய்கிருேம்.
உங்கள் தேவைகளுக்கு
எமது காட்சி அறையை நாடுங்கள்.
V. K. இராசரத்தினம்
95, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

கைலாச பிள்ளையார் கும்பாபிஷேகம்
சிறப்புற வாழ்த்தி நிற்கிருேம்!
தரமான கறுப்பு வெள்ளை
கலர் படங்களுக்கு
நீங்கள் நாட வேண்டியது
பாரத் ஸ்ருடியோ
82/1&2, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

விநாயகப் பெருமானின் கும்பாபிஷேகம்
சிறப்புற வாழ்த்துகின்ருேம்
★
நியூ சி. கே. பி. ரெக்ஸ்ரைல்
★
7, (74) பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

கணபதியே! காத்தருள்வாய்!!
யாழ் நகரில் ஓர் ஜவுளி சமுத்திரம்
★ நாளுக்கோர் புதுமை
★ நாடுவது உண்மை
இவற்றை அளிப்பது தான்
சீமாட்டி
திருமண முகூர்த்தத்துக்கான பட்டுப்
புடைவைகளுக்கு நீங்கள் நாட வேண்டியது
சீமாட்டி
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

கும்பாபிஷேகம் சிறப்புற
வாழ்த்துகின்ருேம்!
அதி சிறந்த ரக
கைத்தறிப் புடைவைகளுக்கும்
பட்டு வேட்டி, சேட்டிங், சூட்டிங்
வகைகளுக்கும் நீங்கள் நாட வேண்டியது
ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ,
79, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

விக்கினம் தீர்க்கும் விநாயக பெருமானது கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின்ருேம்!
★ கோவில் அபிஷேகம், திருவிழாக்கள் ★ புதுமனைப் பிரவேசம் ★ திருமண விழாக்கள்
★ புதுமனைக்கு அத்திவாரமிடல் முதலிய வைபவங்களுக்குத் தேவைப்படும்
★ சுத்தமான பசு நெய் ★ அபிஷேகத் திரவியங்கள் ★ விளைவு சூடம் ★ சாம்பிராணி ★ ஊதுபத்தி ★ வாசனைதிகள்
முதலிய சகல பொருள்களும் ★ சந்தனம் ★ குங்குமம் முதலியனவும் தங்கள் திருப்திக்கேற்ற வகையில்
மலிவாக எம்மிடம் கிடைக்கும்.
சவ்வரிசி, சேமியா, நெல்லிகிறஷ், பாதாம் பருப்பு, பச்சைச்சந்தனம், சித்த ஆயுர்வேத மருந்துகள் கோரோசனை,
கஸ்தூரி குங்குமம், மருந்துச் சரக்குகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம்.
வைத்தியர்களுக்கும், வியாபாரிகளுக்கும் தகுந்த கமிஷன் வழங்கப்படும்.

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 160, செட்டியார்தெரு, கொழும்பு - 11 தொலைபேசி: 35825


நல்லூர் கைலாசநாதபிள்ளையார் ஆலய
மகா கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின்ருேம்
Shabra Unico Finance Ltd.
207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 61, நியூ புல்லர்ஸ் வீதி, கொழும்பு - 4


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஸ்ரீ கைலாசநாத பிள்ளையார் ஆலய மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்



மூலமூர்த்தியின் திரு உருவம் (உ)

## காஞ்சி ஜகத்குருவின் ஆசி!



உ

ஸ்ரீ சந்த்திர மௌளீஸ்வராய நம.
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு
ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் ஸ்ரீ மடம்
ஸமஸ்தானம் காஞ்சிபுரம்.

தலைமை அலுவலகம் :
1, சாலைதெரு,
பெரிய காஞ்சிபுரம் - 631502
19-08-1988


ஸ்ரீ லங்கா யாழ்ப்பாணத்தில் உள்ள பழைமைமிக அருள்மிகு ஸ்ரீ கைலாசநாதபிள்ளையார் கோவில் ஜீர்ணோத்தாரண பணி முடிந்து 15-09-1988 இல் மகாகும்பாபிஷேகம் நடைபெற இருப்பதையும், அது தொடர்பாக நடக்கும் நிகழ்ச்சிகளையும் அறிந்து மகிழ்கிறோம்.

மகாகும்பாபிஷேகம் இனிது நிறைவேறவும் —

கும்பாபிஷேகம், இறைவழிபாட்டின் பெருமை, ஆலயம்தொழுதல், பேணிக்காத்தல் முதலிய புண்ணிய பணிகளின் இன்றியமையாமையை மக்கள் மனதில் ஆழப்பதிய வைப்பனவாக அமையவும்—

ஸ்ரீபரமேஸ்வரனினது அருள் கிடைக்கவும் ஆசீர்வதிக்கின்றோம்.

நாராயண ஸ்மிருதி.



மூலமூர்த்தி மற்றும் சிவனின் அழகிய ஸ்தூபிகள், 1970 ஆம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேகத்தின் போது எடுக்கப்பட்ட படம். (உ)

# கைலாசநாத பிள்ளையார் ஆலயத்தின் ஆயிரம் வருடகால வரலாற்றுச் சிறப்பு

-மணிக்குருக்கள்-

நல்லைநகர் வாழ் ஸ்ரீ கைலாயநாத பிள்ளையார் ஆலயம் ஏறக்குறைய ஆயிரம் ஆண்டு காலதொன்மையானவரலாற்றினையும், குறையாச்சிறப்பினையும், குன்றுப்புகழினையும் கொண்டது.

கீழ்த்திசை நோக்கி அமைந்துள்ளது இவ்வாலயம் ஈழத்தில். முன்புறத்தில் மூன்றுவாயில்களைக் கொண்ட ஒரே தலம் என்ற முதன்மையையும் பெற்றது.

சித்திரையில்விநாயப் பெருமானுக்கும், ஆனியில்ஆலமுண்டநீலகண்டனுக்கும்சிறப்பு உற்சவங்களும்,-

ஆடிப்பூரத்தை ஆதாரமாகக்கொண்டு அம்மனுக்கு அபிடேக ஆராதனைகளும்,-

மார்கழியில் பிள்ளையார்கதை, விநாயகர் சதுர்த்தியும் இங்கு நடைபெறும் விசேட உற்சவங்களாகும்.

மற்றும் தைப்பூசம் முதல்திருவாதிரைவரை மாதாந்த உற்சவங்கள் அனைத்தும் இங்கு இடம்பெறுவதும் குறிப்பிடத்தக்கவை. மற்றும், வருடந்தோறும் நடைபெறும் அறவழியாகுங்கள்பிள்ளையார் அடியவர்களுக்குப் பிரசாதம் அருள் சுரக்கும் ஆனந்தத் திருநாள்களாகும்.

யாழ் மக்களின் புராதன வரலாற்றுப் பின்னணியை எடுத்துக்கூறும் "யாழ் வைபவமாலை" என்ற சரித்திர நூல்களும் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு அவதானிக்குமிடத்து இவ்வாலயம் ஆரம்பகாலத்திலும் கைலாசநாதர் சமேத கைலாச நாயகி அம்மன் எனப் பெயர்கொண்ட ஒரு சிவாலயம் என்பது புலனாகின்றது.

பதின்மூன்றாம் நூற்றுண்டின் முற்பகுதியில் யாழ்ப்பாண அரசை ஆட்சி செய்த சிங்கை ஆரியச் சக்கரவர்த்தியால்இவ்வாலயம்தோற்றுவிக்கப்பட்டது.

இதற்கான ஆதாரம் இன்றும் விளங்குகின்றது.

ஆலய உற்சவ காலங்களில் சுவாமி உலாவலம் வரும்போது கூறப்படும் கட்டியத்தில் இம்மன்னனின் பெயர் இடம் பெறுவது இதனை மேலும் ஊர்ஜிதப்படுத்துகிறது.

இம்மன்னனின் திருப்பணியாக இத்திருத்தலத்தில் மூன்று சபைகள் பரிவார தெய்வங்கள் யாகசாலை உக்கிராணசாலை அக்கிரகாரம், தேரேடும்வீதி, அன்ன சத்திரம், அடியார்கள் திருமடம். கோபுரம். சுற்றுமதில் ஆகியவற்றை ஆகமப் பிரமாணத்துக்கமைய அமைக்கப்பட்டன. இம்மன்னனால் இவ்வாலயத்தில் ஸ்தாபிக்கப்பட லிங்கம் கேதாரத்தில் மன்மதனால் பூசிக்கப்பட்டது என்பதாகும்.

இம்மன்னனைத்தொடர்ந்து இவனது மகன் குலோத்துங்கன் அரசகட்டிலேறினன். அவனும் தன தந்தையைப் போல் இவ்வாலயத்தை கண்ணெனக் கண்காணித்து வந்தான்.

யாழ்ப்பாணத்தின் கடைசிக் காவலன் சங்கிலியன் போத்துக்கேயரால் சிறைப்பட்டு கொலையுண்டபின் பரவலாகப் பல சைவ ஆலயங்களும் பரிநாசமாக்கப்பட்டன.

ஆனால் அன்றுபறங்கியருக்குப் பக்கபலமாக நின்ற பரராஜசிங்க முதலியின் பராமரிப்பில் நல்லூர் பகுதி இருந்ததால் அவன் உயிருடன் உள்ளகாலம் வரை இவ்வாலயத்துக்கு ஓர் இன்னலும் ஏற்படவில்லை.

### பறங்கியர் அழிப்பு

பரராஜசிங்க முதலி இறந்தபின் இப்பகுதி பறங்கியரின் நேரடி பரிபாலனத்தின்கீழ் வந்தது. நல்லூரில் உள்ள ஏனைய ஆலயங்களைப் போன்று இவ்வாலயமும் அழிக்கப்பட்டு ஆலய அமைப்புக்கள் அத்தனையும் சிதைக்கப்பட்டன.

இவ்வேளை ஆலய அர்ச்சகர்களாக இருந்த காசிப் பிராமணர்கள் இவ்வாலய மூலமூர்த்திகளையும் ஏனைய பரிவார தெய்வங்களையும் யாழ்ப்பாணத்தின் நாலாபக்கங்களுக்கும் எடுத்துச் சென்றனர். குறிப்பாகச் சாவகச்சேரிக்கும் திருநெல்வேலிக்கும் எடுத்துச் சென்றனர். இவை நீர்நிலைகளிலும் நிலத்துக்கடியிலும் மறைத்து வைக்கப்பட்டன.

இவ்வாலயத்தின் அன்றைய பிரதான குருக்கள் கைலாசநாத சிவலிங்கமூர்த்தியை மட்டுவிலுக்கு எடுத்துச் சென்று அங்குள்ளகேணியொன்றில் மறைத்து வைத்தார். பின்னர் கைலாசநாத லிங்மூர்த்தியே மட்டுவில் சிவாலய மூர்த்தியாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளதாகக் கூறுவார்.

பறங்கியரைத் தொடர்ந்துடச்சுக்காரர் யாழ்ப்பாண அரசை தம் அதிகார ஆட்சிப்பலத்தின் கீழ் கொண்டுவந்தனர். இவ்வாலயத்தின் இடியுண்ட கருங்கற்களை இவர்கள் எடுத்துச் சென்று ஊர்காவற்றுறை சற்கோட்டைச் சுவர்களாக்கினர் என வரலாறு கூறுகின்றது.

19 ஆம் நூற்றுண்டின் ஆரம்பத்தில இக்கோயிலின எஞ்சிய இடிபாடுகளுக்கிடையே அடர்ந்து வளர்ந்த பற்றைக்குள் இறைவனின் திருவருளால் கைலாசநாத கோயிற் பிள்ளையார் விக்கிரகம் கண்டெடுக்கப்பட்டது நல்லைநகர்மக்கள் ஆனைமுகம் கொண்ட ஐங்கரநாதனை ஒருவில்வ மரத்தடியில் வீற்றிருக்கச் செய்து விருப்புடன் பூசித்தனர்.

ஐந்தாம் குரவர் எனப் போற்றப்படும் ஆறுமுக நாவலர் அவர்கள் 1850 ஆண்டளவில் வில்வமரத்தடியில் இருந்த பிள்ளையாருக்கு ஓலையால் ஒரு மண்டபம் அமைத்து இதனை ஓர் பிள்ளையார் கோவிலாக்கினுர். நாவலர் பெருமானது மருகனுர் திருவாளர் நிகாசிப்பிள்ளை அவர்கள் தொடர்ந்து ஓலைக்குடிலைக் கற்கோயிலாக மாற்றினுர்.

மறுசீரமைப்புக் கொண்ட இவ்வாலயம் 1916 ஆம் ஆண்டு முதன் முதலில் குடமுழுக்குக் கண்டது.

தொடர்ந்து இவ்வூர் அடியார்களின் அருமுயற்சியால் இவ்வாலயத்திற்கு புதிதாகச் சிவலிங்கமும் அம்பாள் விக்கிரகமும் இடம்பெறச் செய்யப்பட்டு ஆலயம் சிறப்பினைப் பெற்றது.

பின்னர் மதுரையப்பா சுந்தரம் அவர்கள் இவ்வாலயத் திருப்பணியைத் தொடர்ந்தார்கள்; கோயிலுக்குக் கருங்கற்கள் பதிப்பித்து புதிய மெருகும் பொலிவும் பெறச் செய்தார். இத்தொண்டு இவருக்குப் பின்னர் இவரது சகோதரியான சபாபதி முதலியாரின் மனைவியார் மாணிக்கஅம்மையாரால் 1924 ஆம் ஆண்டு முதல் பெறுப் பற்கப்பட்டது.

1946 ஆம் ஆண்டு ஆகம முறைப்படி ஆலயத் திருப்பணிகள் அனைத்தும் நிறைவு பெற்றுக் குறைவிலா நிறைவுடன் மூலமூர்த்திகளுக்கும் பரிவார தெய்வங்களுக்கும் குடமுழுக்குக் கும்பாபிஷேகம் இனிது நிறைவேறியது.

மாணிக்க அம்மையாரின் பிறிதொரு முயற்சியும் இங்கு இடம் பெறக்கூடிய ஒன்றுகும் இவ்வாலயத்துக்கென இவரால் உருவாக்கப்பட்ட சித்திரத்தேர் 1963 ஆம் ஆண்டு அவரது சகோதரர் திருவாளர் எஸ் சோமசுந்தரம் அவர்களாலும் அவரது சுற்றத்தவர்களாலும் ஊர்மக்களது ஒத்துழைப்பாலும் பூர்த்தியாக்கப்பட்டது.

இச்சித்திரத் தேருக்கு திரு ஸி சுந்தரலிங்கம் அவர்கள் ஊர்மக்களது ஒத்துழைப்புடன் ஒரு தேர்முட்டி அமைத்தார்.

அவரே ஊர்மக்களது முயற்சியுடனும் சர்மாக் குருக்களது பக்கத்துணையுடனும் இவ்வாலயத்தின் தென்மேற்கு மூலையில் கோயில் கொண்டருளியிருக்கும் பஞ்சமுக விநாயகரைப் பிரதிஷ்டை செய்ய வழிகோலினுர்.

சர்மாக் குருக்களது

(7 ஆம் பக்கம் பார்க்க)

விக்னேஸ்வரர் அருள் பெற வாழ்த்துகின்றோம்.
★ கோயில் அபிஷேகப் பொருள்கள்,
★ மருந்துச் சரக்குகள்
மலிவாகப் பெற்றுக்கொள்ள
★
க. செ. கைலாசம்பிள்ளை
அன் சன்ஸ்
5, (76) பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

விக்கினம் நீக்கிடும் விநாயகன்
அருள்வேண்டி நிற்கின்றோம்.
★
குகன் ஸ்ரோர்ஸ்
★
180, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

குடமுழுக்கு நிகழும்
விக்கினம் விலக்கும் விநாயகனைக் கைதொழுது
இன்னருள் வேண்டிப் பிரார்த்திப்போம்!
தரமான சேட்டிங், சூட்டிங், புடைவை
வகைகளுக்கும் றெடிமேட் ஆடைகளுக்கும்
த. குமாரசாமி
ரெக்ஸ்ரைல்ஸ்
42, 44, பெரியகடை, யாழ்ப்பாணம்.
கிளை:
சௌபாக்கியாஸ்
22 (63), பெரிய கடை, யாழ்ப்பாணம்.

விநாயகப் பெருமான்
கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின்றோம்!
★
முருகன்
எலக்றிக்கல் ஸ்ரோர்ஸ்
(30 வருட சேவையின் சின்னம்)
6/8, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

கணபதி தாள் பணிந்து வாழ்த்துகின்றோம்.
உர வகைகள், அக்ரோ இரசாயனப்
பொருள்களுக்கு சிறந்த இடம்
★
ஈஸ்ரேன் ரேடர்ஸ்
★
95/2 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

விநாயகனே !
வினை தீர்ப்பவனே !
★
அம்பிகாபதி
பான்ஸி கூட்ஸ்,
★
66, பெரிய கடை
யாழ்ப்பாணம்.



முன்னுக்கே இருந்து மூளும் வினைதீர்த்து
முத்தமிழை வித்தகமாய் எழுத வைத்து
சித்திபலவும் தரும் மூத்த விநாயகனே
ஏத்திச் சரண்புகுந்தோம் கைலாசபிள்ளையாரே!
உதயன் - சஞ்சீவி - அர்ச்சுன
வெளியீட்டாளர்கள்
நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒட்டுசுட்டானில் கோமாரி

ஒட்டுசுட்டான் நகரை அண்டிய பகுதிகளில் கோமாரி நோய் தீவிரமாகப் பரவி வருகிறது.

கற்சிலைமடு, முத்துஐயன் கட்டு, பேராறு கிராமங்களில் விலையுயர்ந்த பசு மாடுகள் கோமாரி நோயினால் பீடிக்கப்பட்டு மரணம் அடைகின்றன.

வனவிலங்குகளும் நோயினால் பீடிக்கப்பட்டு காடுகளுக்குள்ளும் கிராமப்புறங்களிலும் இறந்து கிடப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது. (இ-113)

## மண்வெட்டி

கோப்பாய், செப். 15

வடபகுதி விவசாயிகளுக்கு கமநலசேவை நிலையங்களினால் இங்கிலாந்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மண்வெட்டிகள் வழங்கப்படவுள்ளன. (இ-72)

இரத்தம் கொடுக்க வருபவர்

# உறவினராகவோ அல்லது தெரிந்தவராகவோ இருப்பது நல்லது

## யாழ் இரத்த வங்கி அதிகாரி ஒருவர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், செப். 15

யாழ் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் நோயாளிகளுக்கு இரத்தம் கொடுக்க வருபவர்கள் நோயாளியின் உறவினராகவோ அல்லது மிகத் தெரிந்த நண்பராகவோ இருப்பது மிகமிக நல்லது.

மாருகத் தெருவில்நிற்பவர்களைக் காசுக்குப் பிடித்துவந்து இரத்த வியாபாரம் செய்யவைப்பதால் இரத்தம் ஏற்றப்படும் நோயாளி மேலும் நோய் வாய்ப்பட நேரிடலாம்.

யாழ் இரத்த வங்கிக்குப் பொறுப்பான அதிகாரி ஒருவர் இவ்வாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

இரத்தம்மூலம் தொற்றும் எல்லா நோய்க் கிருமிகளையும் சோதனை செய்ய உபகரண வசதிகள் எம்மிடம் இல்லை, ஆனால் குறிப்பிட்ட சில நோய்ப்பரிசோதனைக் கருவிகளே கைவசம் உண்டு. ஏனையவற்றுக்கு இரத்தம் கொடுக்கவருபவர்களைத் தீரவிசாரித்த பின்னரே இரத்தத்தை எடுக்கிறோம்.

ஆனால் இவ்வாருக இரத்தம் விற்க வருவோர் தமது வியாபாரம் தடைப்பட்டு விடுமோ என்ற பயத்தில் உண்மையை மறைத்துவிடுகின்றனர். நோய்க் கிருமிகளை உள்ளடக்கிய இரத்தத்தை விற்றுவிட்டுப் போய்விடுகின்றனர்.

அவ்வாருகப் போனவர்கள் பலரில் ஆபத்து நிறைந்த பீரசுவைரசால் தொற்றும் மஞ்சள் காமாலைநோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு அந்த இரத்தம்வெளியே கொட்டப்பட்டுவிட்டது.

இதற்கான பரிசோதனைக் கருவி எம்மிடம் இருந்ததால் அது கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் இவ்வாருக இரத்தத்தினால் பரவும் எயிட்ஸ் போன்ற பயங்கர நோய்களைக் கண்டுபிடிக்கும் கருவிகள் எம்மிடம் கைவசமில்லை.

இதேபோல பலதரப்பட்ட நோய்கள் எமது பரிசோதனைகளை மீறி நோயாளியைத் தாக்க ஏதுவாகின்றன.

எனவே பொதுமக்கள் இதுவிடயத்தில் கவனமெடுத்து தமக்கு மிகத் தெரிந்தவர்கள் மூலமே இரத்த விநியோகம் செய்ய முன்வரவேண்டும்.

மாருகத் தெருவில் போகிறவர்களை எல்லாம் பிடித்துவந்து உறவினர்கள் என்று பொய்த்தகவல்களை இரத்த வங்கியினருக்குத் தருவதால் நீங்களே உங்களது நோயாளியைப் பாரதூரமான விளைவுகளுக்குட்படுத்துகிறீர்கள் என்பதை மறக்கக்கூடாது.

இவ்வாறு அவர் தெரிவித்தார். (இ-9)

## நூலகப் பயிற்சி

பருத்தித்துறை, செப் 15

நூலகவியல் பயிற்சியாளர்களுக்கான இரு வாரகால நூலகப் பயிற்சி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் கடந்த 5 ஆம் திகதி ஆரம்பமாகியுள்ளது.

இலங்கை நூலகச் சங்கத்தால் நூலக அபிவிருத்தி கருதி மேற்கொள்ளப்பட்டு வரும் நூலகவியலும் தகவல் விஞ்ஞானமும், பயிற்சி நெறியில் நூலகப் பயிற்சிகளைப் பெறும் நூலகப் பயிற்சியாளர்களுக்கே இப்பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (இ-118)

## புளியடிச்சோலை மக்கள் குறை நீங்குகிறது

திருகோணமலை, செப். 15

மூதூர்உதவிஅரசாங்க அதிபர் பிரிவிலுள்ள புளியடிச்சோலை என்னும் கிராமத்தில் 1958 ஆம் ஆண்டு முதல் 129 குடும்பங்கள் ஒரே கிணற்றில் தான் தண்ணீர் அள்ளி வந்தனர்.

இவர்களின் கஷ்ட நிலையைப் போக்குவதற்காகத் திருகோணமலை மாவட்ட அகதிகள்நலன் புரிக் கழகம் முன்வந்துள்ளது.

கனேடிய அரசினால் இந்த நலன்புரிச் சங்கத்துக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட 1 இலட்சத்து 30 ஆயிரம் ரூபா மூலம் இந்தக்கிராமத்தில் ஐந்து கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன.

## முழங்காவில் கிளிநொச்சி பஸ்சேவை

யாழ்ப்பாணம், செப். 15

முழங்காவில், பல்லவராயன்கட்டு, ஜெயபுரம் ஆகிய பகுதிப் பொதுமக்களின் போக்குவரத்துக் கஷ்டங்களைக் கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபர் திரு. சொ. அமிர்தலிங்கத்திடம் பல்லவன் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் எடுத்து விளக்கினர்.

இதன் பயனாக முழங்காவிலுக்கும், கிளிநொச்சிக்குமிடையே தினமும் இரண்டு பஸ்சேவைகள் நடைபெற ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. (இ-150)

# ஆரம்ப ஆசிரியர்களாகத்தெரிவான மேலும் 53 பேரின் விபரம்

யாழ்ப்பாணம், செப் 15

மேலும் 53 பேர் ஆரம்ப ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களது பெயர்கள் அடங்கிய பட்டியல் நேற்று யாழ். கல்வித் திணைக்களத்திற்கு தபால் மூலம் வந்து சேர்ந்தது.

இந்தப் பட்டியல் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டது பற்றி கடந்த 10 ஆம் திகதி சஞ்சீவியில் செய்திவெளியிடப்பட்டிருந்தது தெரிந்ததே.

இந்தப் பட்டியலில் உள்ளவர்களின் பெயர் விபரம் வருமாறு:-

ஆர்.மாலதி, வவுனியா செல்விகள் நடராஜா, சுகிர்தினி, வவுனியா; கந்தசாமி சிவபாக்கியம், வவுனிக்குளம்; எஸ். புவனேஸ்வரி, வவுனிக்குளம்; பீ. பத்மதேவி, யோகபுரம்; ஈ. ஜெகதீஸ்வரி, பூநகரி.

பாஸ்கரன், வல்வெட்டித்துறை; எஸ். இராஜமணி, புலோலி; ம. வசந்தகுமாரி, நயினாதீவு; எஸ். கமலாவதி, இளையதம்பிலுவில்; என். அன்பரசி, சாவகச்சேரி; என். ஜெகதீஸ்வரி, சாவகச்சேரி.

ஆர். எஸ். இந்துமதி, வேலணை; எஸ். செல்வமலர், கோண்டாவில்; ஏ. பாலநாயகி, கரவெட்டி; ரீ. மாலினி, சாவகச்சேரி; எஸ். சந்திரராணி, நெடுந்தீவு; பீ. நாகேஸ்வரன், சாவகச்சேரி; பீ. உதயகுமாரி, சாவகச்சேரி; ரீ. உமாகௌரி, சாவகச்சேரி.

பீ. சரோஜினிதேவி, புதுக்குடியிருப்பு; செல்வி கே. புஷ்பராணி, ஒட்டுசுட்டான்; எம். பத்மாவதி, வவுனிக்குளம்; கே. நகுலேஸ்வரி, நெடுங்கேணி; ஜே. குசலகுமாரி, கோப்பாய்.

ஐ. புஷ்பலதா, கோப்பாய்; செல்விகள். எம். வசந்தி, யாழ்ப்பாணம்; எஸ். சந்திரகலா, கொடிகாமம்; இரத்னசபாபதி, வசந்தி புங்குடுதீவு; ஏ. ஜே. கிளாசிற்றஸ், ஊர்காவற்துறை; எஸ். நவநீதம், காரைநகர்.

ரீ. சிவபாலன், காரைநகர்; செல்வி. கே. தவமலர், சாவகச்சேரி; செல்வி. எஸ். கலாநிதி, மிருசுவில்; திரு ரீ. செல்வராஜா, மிருசுவில்; செல்வி எம். கனகாம்பிகை, கோண்டாவில், செல்வி வி. சிவகாமிப்பிள்ளை, மிருசுவில். செல்வி எஸ். சிவனேஷ், முள்ளியான். செல்வி. எம். எஸ். சவரிமுத்து, ஊர்காவற்றுறை; செல்வி எம். கே. நதிரா, மறிச்சுக்கட்டி.

செல்லத்துரை புவனேஸ்வரி, வவுனிச்குளம் சண்முகலிங்கம் உதயராணி: யாழ்ப்பாணம். இராமநாதன் யோகமலர், நெடுந்தீவு கிழக்கு. வீ. கலாரஞ்சனி, கோப்பாய், நே. கலையரசி புங்குடுதீவு.

அக்னஸ் மனோகரி விக்ரர், ஊர்காவற்றுறை; தம்பு தெய்வமணி, அச்சுவேலி; சூரியகலா கணபதிப்பிள்ளை, சுழிபுரம்; தயாபரி அப்புத்துரை, சுழிபுரம்; மதியாபரணம் தேவநாயகி, நீர்வேலி, சபாநாதன், பிறேமலதா, கைதடி; ஜீவநாதன் குசலகுமாரி, கோப்பாய்; செல்வரட்ணம் ஹேமலதா, கோப்பாய்;

இந்த பட்டியலில் ஏற்கனவே அறிவிக்கப்பட்டு பின்னர் இடைநிறுத்தப்பட்ட 14 பேரின் பெயர்களும் அடங்கியுள்ளன. (ஒ.9)

## 16ஆம் திகதி சமுகம் தரவேண்டும்

யாழ்ப்பாணம் செப் 15

யாழ் கல்வித்திணைக்களத்தினால் 13-9-88 வெளியிடப்பட்ட பட்டியலின்படி 53 ஆரம்ப ஆசிரியர்களுக்கும், மற்றும் ஆகஸ்ட் 29 ஆம் செப்டம்பர் 8 ஆம் 11 ஆம் திகதிகளில் உதயனில் வெளியான பட்டியலின்படி தெரிவு செய்யப்பட்டவர்களுக்கும்-

கடந்த மாதம் 17 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்ற சேவை முன் பயிற்சியில் கலந்து கொள்ளாதவர்களுக்கும் சேவைக்காலமுன்பயிற்சி எதிர்வரும் 21 ஆம்திகதி ஆரம்பமாகும்.

எனவே குறிப்பிடப்பட்ட அனைவரும் நாளை 16 ஆம் திகதி யாழ் கல்வித் திணைக்களத்திற்கு சமுகம் தந்து பிரதம கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரத்திடம் இருந்து சேவை முன் பயிற்சிக்கான அனுமதிக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளும்படி பணிக்கப்பட்டுள்ளது. (ஒ-9)


## ஓராண்டு நினைவு அஞ்சலி



தாயகத்தில்:
21-03-1962

தியாகத்தில்:
15-09-1987

துர்க்கைநாதன் கணேசன்
செல்வப் புதல்வன்
சிவகரன்
மானிப்பாய்.

Oh my Darling Siva
One year has passed.
Where are you ?
My grieve and pain
To whom can I complain.
This world full of lies
No one can realise
Oh my Darling put out your voice
Oh my Darling put out your face
May I see you and quench my love.
Stop my tears year through.
Only Mothers realise
**My Grieve and Pain.**

MRS. K. GANESHAN
& FAMILY

Manipay. (6461)



## 31ஆம் நாள் நினைவஞ்சலி



ஆறுமுகம் பொன்னம்மா

தோற்றம்: 22 - 11 - 1940
ஏற்றம்: 17 - 08 - 1988

அன்பின் பிறப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய் எம்முடன் வாழ்ந்து எங்கள் குடும்ப ஒளிவிளக்காய் வழி நடத்தி எம்மை மீளாத்துயரில் ஆழ்த்திய அன்புத் தெய்வமே! தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அந்தியேட்டிக் கிரியைகள் யாவும் 16-09-1988 அன்று வதிவிட இல்லத்தில் நடைபெறும்.

கணவன், பிள்ளைகள், உறவினர்கள்.

தபாற் கந்தோர் வீதி,
வீமன்காமம், தெல்லிப்பளை. (6479)




பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் யதார்த்த கலை இலக்கிய வட்டத்தால் ''நிழல்கள்'' நூல் வெளியீட்டு விழா அண்மையில் நடத்தப்பட்டது.

பண்டிதை திருமதி சிவநேசம் முருகேசு, இளைப்பாறிய அதிபர் பூபதி கனகசுந்தரம், திருமதி சாந்திதேவி திருச்செல்வம், திருமதி மணிமாதேவி முருகானந்தன் ஆகியோர் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பிப்பதையும்-

திரு. இரா. சந்திரசேகரன் வரவேற்புரை நிகழ்த்துவதையும்-

திரு. தெணியான் ஆசியுரை வழங்குவதையும்,-

வைத்தியக் கலாநிதி எம். கே. முருகானந்தன் தலைமை உரை நிகழ்த்துவதையும்-

வைத்திய கலாநிதி புனிதவதி தங்கராசாவிடமிருந்து பருத்தித்துறை குகன் ஸ்ருடியோ அதிபர் திருமதி வனிதா ஸ்ரீபவன் முதலாவது நூல் பிரதியைப் பெறுவதையும்-

திருமதி கோகிலா மகேந்திரன் ஆய்வுரை நிகழ்த்துவதையும்-

பேராசிரியர் கலாநிதி கா. சிவத்தம்பி சிறப்புரை நிகழ்த்துவதையும்-

அருகில் ''அலை'' ஆசிரியர் திரு. எஸ். யோகராசா, திரு. கருணையோகன் ஆகியோர் இருப்பதையும்-

''நிழல்கள்'' நூலாசிரியை செல்வி சந்திரா தியாகராசா உரையாற்றுவதையும்-

யதார்த்தா கலை இலக்கிய வட்டச் செயலாளர் திரு. ஏ. எஸ். திருச்செல்வம் நன்றியுரை வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள் பருத்தித்துறைச் செய்தியாளர் திரு. பா. இரகுநாதன் (இ-118)

# தடுப்பு முகாம்களிலிருந்து விடுதலையான பலர் இன்னும்வேலைஅற்றநிலையில்

## முன்னைய வேலை கிடைக்கவில்லை என படை அதிகாரிகளிடம் முறையீடு

திருகோணமலை, செப் 15

தடுப்பு முகாம்களில் இருந்து விடுதலையான பலர் இன்னும் தமது பழைய வேலைகளில் அமர்த்தப்படாது கஷ்டமடைந்து வருகின்றனர்.

தடுப்பு முகாம்களிலிருந்து விடுதலை செய்யப்பட்ட இளைஞர்களுக்கும் இலங்கை - இந்தியப் படைகளைச் சேர்ந்த உயர் அதிகாரிகளுக்குமிடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இதுபற்றிப்பிரஸ்தாபிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடல் திருமலை அர்ச். மரியாள் பெண்கள் கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்தியப் படையின் கிழக்குப் பிராந்திய அதிகாரி மேஜர் - ஜெனரல் ஜமீல் மொகமத், பிரிகேடியர். சச்டால், கேர்ணல் சிவாஜி பட்டேல் திருமலையின் புதிய இணைப்பதிகாரி பிரிகேடியர், திலக் பறணகம, கேர்ணல், தவராசசிங்கம் ஆகியோர் இந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

தடுப்பு முகாம்களில் இருந்து விடுதலை செய்யப்பட்டோரும் தடுப்பு முகாம்களிலிருந்து விடுதலை செய்யப்பட்டவர்களின் பெற்றோர்களும் தடுப்பு முகாம்களில் இருப்பவர்களின் பெற்றோர்களும், உறவினர்களுமாக 200க்கும் அதிகமானோர் கூட்டத்துக்கு சமுகமளித்திருந்தனர்.

இளைஞர்கள் பலர் தங்கள் குறைபாடுகளை எடுத்துக் கூறினர்.

பூஸா, நீர்கொழும்பு, மகசின்சிறைச்சாலை ஆகிய இடங்களில் திருகோணமலையைச் சேர்ந்த 157 பேர் இன்னமும் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர்.

இவர்களின் விடுதலையைத் துரிதப்படுத்த வேண்டும் என ஒரு இளைஞர் பிரஸ்தாபித்தார்.

''தடுப்பு முகாம்களில் இருந்து விடுதலை செய்யப்பட்டவர்கள் இன்னமும் முன்னர் செய்த வேலைகளில் அம[illegible]

துரைசிங்கம் விடுதலையாகி 1 வருடத்திற்கும் மேலாகிறது. மீண்டும் அவருக்குகடற்படையில் வேலை கொடுக்கப்படவில்லை'' அதேபோன்று பரமேஸ்வரன் விடுதலையாகி நான்கு மாதங்கள், வேலாயுதம்விடுதலையாகி ஐந்து மாதங்கள் இன்னமும் அவர்களுக்கு மீண்டும் வேலை வழங்கப்படவில்லை'' என சாம்பல் தீவைச் சேர்ந்த திருமதி சதானந்தம் எடுத்துரைத்தார்.

''எந்தெந்த இடங்களில் வேலை செய்தார்களோ அவர்களுக்கு மீண்டும் அந்த வேலை கொடுக்கப்படவேண்டும் என்பதுதான் அரசின் கொள்கை.

ஆனால் வேறுகாரணங்களுக்காக வேலை வழங்கப்படாவிட்டால், அது பற்றிநாங்கள் விசாரித்து நடவடிக்கைஎடுப்போம். இப்படியானவர்களின் முழு விபரங்களையும் எங்களுக்குச் சமர்பிக்க வேண்டும்'' என்று [illegible] பிரிகேடியர். பறணகம கூறினார்.

### வேலை கிடைத்தது சம்பளம் இல்லை

''துறைமுக அதிகார சபையில் ஏழுபேருக்கு அவ்வாறு மீண்டும் தொழில் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அவர்கள் தடுப்புக் காவலில் இருந்த காலப்பகுதிக்கு சம்பளம் வழங்கப்படவில்லை என்று முறையிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக நாங்கள் மேலிடத்தில் நடவடிக்கை எடுக்கவுள்ளோம்'' என்றுகேர்ணல் தவராசசிங்கம் தெரிவித்தார்.

விடுதலையான இளைஞர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் முகமாக ஒவ்வொருவரின் தகைமைகள், படிப்பு போன்ற விவரங்களைத் தந்தால் எங்கெங்கு வேலை வாய்ப்பு இருக்கிறதோ அங்கங்கு அவர்களை வேலைக்கு அமர்த்தலாம் என்று மேஜர்-ஜெனரல். ஜமீல் மொகமத் கூறினார்.

இந்த விவரங்களைச் சேகரித்து ஒரு பட்டியல் தயாரிப்பதற்காக நகரசபை அலுவலகத்தில் ஒரு கப்டன் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்றும் இளைஞர்கள் தங்கள் முழு விபரங்களையும் கொடுத்து உதவும் படியும் அவர் மேலும் கூறினார்.

ஒப்பந்தின்படி தடுப்புக் காவலில் உள்ளவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டிருக்கவேண்டும். ஆனால் பலர் கூட இன்னமும் விடுதலை செய்யப்படவில்லை. நான் கூட ஒரு மாதத்துக்கு முன்னர்தான் விடுதலை செய்யப்பட்டேன். சிலருக்கு நீதிமன்றத்தில் தண்டனைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. இது என்ன காரணம்? இது எனக்கு விழங்கவில்லையே என ஒரு இளைஞர் கேட்டார்.

இதுபற்றித் தங்களுக்குத் தகவல் கிடைக்கவில்லை எனினும் விசாரித்து நடவடிக்கை எடுப்பதாக அதிகாரிகள் கூறினர்.

### அடையாளக்கார்ட்

விடுதலையானவர்கள் பலருக்கு அடையாள கார்ட் இல்லை என்றும் அமைதிப்படையினரிடம் சிக்கி பலர் கஷ்டத்துக்கு உள்ளாவதாகவும் இங்கு முறையிடப்பட்டது.

அடையாளக்கார்ட் இல்லாதவர்கள் ஒரு குறிப்பிட்ட அதிகாரியைச் சந்தித்து விவரங்களைக் கொடுக்கும்படி மேஜர்-ஜெனரல் கூறினார்,

படம் பிடித்து தற்காலிக அடையாளக் கார்ட்டுகளை அவர்களுக்கு வழங்கமுடியுமெனவும் அவர் சொன்னார். [இ-150]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரியல் இது.

**பொருள்:**

ஒருவன் பொருளை ஈட்ட வேண்டும்; அவனுடைய பகைவரின் செருக்கைக் கெடுக்க வல்ல வாள் அதைவிடக் கூர்மையானது வேறு இல்லை.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
32073
யாழ்ப்பாணம்.
15-09-1988 த. பெ. இல 23


## தியாகி திலீபனை நினைவு கூருவோம்

ஈழத் தமிழர்களின் அரசியல் வரலாற்றில், அவர்களின் உரிமைக்காக உண்ணாநோன்பிருந்து தன்னுயிர் ஈந்த தியாகச் செம்மல் திலீபனை, ஈழத் தமிழ் மக்கள் இன்று நினைவு கூருகின்றார்கள்.

அகிம்சைப் போராட்டம் மூலம் அரசியல் உரிமைகளைப் பெறமுடியும் என்று காட்டித் தந்தவர் — உத்தம புருஷர் — இந்தியாவின் தேச பிதா — மகாத்மா காந்தி அடிகளே.

ஆனால் தியாகி திலீபன் சென்ற வருடம் இதே ஆண்டில் முன்வைத்த உரிமைக்கான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு இந்தியா உகந்த முறையில், உரியநேரத்தில், எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் செயலாற்றாததால் திலீபன் வீர சொர்க்கம் அடைந்தான்.

★ புனர்வாழ்வு ஏற்பாடுகள் என்ற போர்வையில், தமிழர் தாயகத்தில் நடக்கும் சிங்களக் குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

★ உத்தேச இடைக்கால அரசாங்கம் அமைக்கப்படும் வரை புனர்வாழ்வு வேலைகளை நிறுத்த வேண்டும்.

★ வடக்கு, கிழக்கில் பொலீஸ் நிலையங்கள் நிறுவுவதை உடன் இடைநிறுத்த வேண்டும்.

★ ஊர்காவற் படையினரின் ஆயுதங்கள், இந்திய அமைதிப் படையினரின் மேற்பார்வையில் திரும்பப் பெறப்பட வேண்டும். அத்தோடு தமிழ்க் கிராமங்களில், பாடசாலைகளில் உள்ள சகல ஸ்ரீலங்கா இராணுவ, பொலீஸ் முகாம்களையும் உடனடியாக மூடவேண்டும்.

★ பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் இன்னமும் சிறைகளிலும் தடுப்பு முகாம்களிலும் உள்ளவர்களை உடன் விடுதலை செய்யவேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளை முன்வைத்தே திலீபன் உண்ணா நோன்பிருந்து உலகச் சரித்திரம் படைத்தான்.

இந்த ஐந்து கோரிக்கைகளில் ஒன்றாவது இதுவரை பூரணமாக நிறைவேற்றப்படவில்லை.

கடந்த ஒரு வருட காலத்தில் ஈழத்தமிழ் மக்களுக்கு மேலும் மேலும் பிரச்சினைகளும், துன்பங்களும் அதிகரித்தன; அதிகரித்து வருகின்றனவே அன்றி விடியலுக்கான அறிகுறி எதையும் காண முடியவில்லை.

தியாகி திலீபனுக்குப் பிறகு அன்னை பூபதியும் இவ்வருடம் அகிம்சை ஆயுதத்தை ஏந்தி, தமிழர் அமைதி வாழ்வுக்கு வழி காணக் கோரித் தனது இன்னுயிரை ஈந்தார்.

இன்று தியாகி திலீபன் தனது உண்ணா நோன்பை ஆரம்பித்து ஒரு வருடம். ஆனால் தமிழர் அரசியல் நிலையில் செயல்முறையில் எவ்வித மாற்றமும் இல்லை.

திலீபன் உண்ணா நோன்பு அனுஷ்டித்த 13 நாட்களையும் அகிம்சை வாரமாக, துக்க வாரமாக அனுஷ்டிக்க தமிழ் மக்கள் முடிவு செய்திருக்கின்றார்கள்.

அதன் மூலம், தமிழர்கள் தமது உரிமைகளை இன்னமும் பெற முடியவில்லை என்பதை உலகுக்கு எடுத்துக் காட்ட முடியும்.

ஈழத் தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளை வென்றெடுக்க ஒன்றாக அணிதிரள்வதற்கு பின்னிற்கப் போவதில்லை என்பதையும்இது எடுத்துக்காட்டுகின்றது.

உரிமைகளைப் பெறவேண்டும் என்ற மக்கள் உணர்வை, எழுச்சியை எடுத்துக்காட்ட அகிம்சைப் போராட்டம் பெரிதும் உதவும்.

மக்கள் புரட்சி வெடித்தால் அதற்கு எதிராக எந்தச் சக்தியும் ஈடுகொடுக்க முடியாது என்பது சரித்திர உண்மை.

### ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில்

பண்டத்தரிப்பு, செப்.15

அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் புதிய கருங்கல் திருப்பணிக்கான சங்குஸ்தாபன வைபவம் இன்று வியாழக்கிழமை காலை 6.00 மணிக்கும் 8.00 மணிக்கும் இடையிலுள்ள சுபமுகூர்த்தத்தில் நடைபெறும்.

### ஆசிரியர் விவரம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் புதிதாக ஆசிரியர் நியமனம் பெற்றவர்களுக்கான விவரங்களை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க மாவட்டக்கிளை திரட்டுகிறது.

மேற்படிஆசிரியர்களுக்கான கருத்தரங்கை விரைவில் நடத்துவதற்காகவே இவ்விவரம் திரட்டப்படுகிறது.

நிறுத்தி வைக்கப்பட்ட

# 520 கோடி டாலரை ஐ.நா.வுக்கு வழங்க அமெரிக்க அதிபர் றேகன் உத்தரவு!

## வங்குரோத்து நிலை தவிர்க்கப்பட்டது

ஐ. நா, செப் 15

ஐக்கிய நாடுகள் சபைக்கு செலுத்தவேண்டிய நிலுவையான 520 கோடி டாலரை ஐந்து ஆண்டுகளில் செலுத்துவதற்கு அமெரிக்கா முன் வந்துள்ளது.

முதல் தவணையாக 188 கோடி டாலர் பணத்தை உடனடியாக ஐ நா. வுக்குச் செலுத்தும் படி அதிபர் றேகன் நேற்று உத்தரவிட்டார்.

ஐ நா வின் செயல் திட்டம், ஒதுக்கப்பட்ட பணத்தைச் செலவு செய்வதில் ஐ நா. சபை பிடித்த முறைகளில் அதிருப்தி கொண்டதால் அமெரிக்கா நிதி உதவி செய்ய மறுத்து வந்தது.

இதைத் தவிர்க்க ஐ. நா. பொதுச்செயலாளர் பெரெஸ் டி குயிலார் அதிபர் றேகனை அவசரமாக சந்தித்துப்பேசினர்.

உலகில் ஐ நா. இப்போது ஆக்கபூர்வமான முறையில் செயல் பட்டு வருவதால், கொடுக்காது இருந்த நிலுவையை வழங்கத் தீர்மானித்திருப்பதாக அதிபர் றேகன் தெரிவித்திருக்கிறார்.

ஐ நா. சபையின் 41 ஆவது ஆண்டு பொதுக் கூட்டம் இம் மாதம் 20 ஆம் திகதி ஆரம்பமாகின்றது மூன்று மாதங்களுக்கு தொடர்ந்து நடைபெறும். (எ)

வெளி உலகில்

### கரிபியனில் சூறாவளி

லண்டன், செப். 14

கரிபியன் தீவுகளை 170 மைல் வேகத்தில் வீசிய சூறாவளி தாக்கியது. இதில் 35 பேர் உயிரிழந்தனர். சொத்துக்களும் பலத்த சேதம் அடைந்தன (எ)

### 17 பேர் பஞ்சாபில் மரணம்

புதுடில்லி, செப் 14

பஞ்சாப் மாநிலத்தில் பாட்டியாலா என்னும் இடத்தில் சீக்கியத் தீவிரவாதிகள் கண்மூடித்தனமாக சுட்டதில் 17 பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது. (எ)

# அ.தி.மு.க. கோபுரத்துக்கு மீண்டும் குடமுழுக்கு; எம். ஜி. ஆர். ஆட்சி மீண்டும் ஏற்படும்;

வேலூர், செப் 14

அ. தி மு. க எனும் கோபுரத்தில் ஏற்பட்ட விரிசல் சரி செய்யப்பட்டு விரைவில் கும்பாபிஷேகம் நடத்தப்படும் அதைத் தொடர்ந்து மீண்டும் தமிழ் நாட்டில் எம். ஜி. ஆர் ஆட்சி ஏற்படுத்தப்படும் —

இப்படி ஜெ. அணியில் இருந்து விலகி நால்வர் அணியின் பொதுச்செயலாளராகத் தெரிவு செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் தெரிவித்தார்.

வேலூரில் நடந்த கூட்டத்தில் அவர் மேலும் சொன்னதாவது;-

"ஜெயலலிதா அவருடைய ஆணவப் பேச்சால் தன்னுடைய பெயரைக் கெடுத்துக் கொண்டார்.

கட்சித்தொண்டர்கள் தேர்தல் நிதியாக அளித்த பணத்தை ஊதாரித்தனமாக செலவு செய்து. அரசியலில் நேர்மையை அவர் இழந்துவிட்டார்.

ஜெயலலிதா தன்னுடைய ஆணவப் பேச்சினால், மற்ற கட்சியினரையும் பகைத்துக் கொண்டார். அவரை நம்பிய சிலர் பரிதவித்துக்கொண்டு இருக்கிறார்கள்.

இனிக்கருணாநிதியுடன் ஜெயலலிதா தேர்தல் உறவு கொள்வதைத் தவிர வேறு வழி அவருக்கு இல்லை.

முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசு கூறியதாவது:-

சுயமரியாதை உணர்வும், தன்மான உணர்வும் கொண்டவர்கள், ஜெயலலிதா பக்கம் இருக்கமுடியாது. பண்பு, ஒழுக்கம் இல்லாத அவர் ஒருபோதும் ஆட்சிக்கு வரமுடியாது.

புரட்சித் தலைவர், அவருடைய தாயார் படத்தை வைத்துக் கொண்டு, ஜெயலலிதாவிடம் ஏதோ சத்தியம் வாங்கியதாக ஜெயலலிதா பொய் சொல்லித் திரிகிறார். இனி அரசியலில் இருந்து ஒதுங்கிவிடு என்று எம் ஜி ஆர் சத்தியம் வாங்கி இருப்பார் என்று தான் நம்புகிறேன்.

இவ்வாறு திருநாவுக்கரசு கூறினார். (எ-4)

# இன்று தி. மு. க. முப்பெரும் விழா சென்னை நகரில் ஏற்பாடு

சென்னை செப் 15

பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாள் இன்று கொண்டாடப்படுகிறது.

அடுத்த நாள் 16ஆம் திகதி அண்ணா அறிவாலய வளாகத்தினுள் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் திருமணமண்டபம், இலவசக் கண்மருத்துவமனை ஆகியவற்றின் திறப்பு விழா.

அதற்கு மறுநாள் 17 ஆம் திகதி தி. மு க. உட்பட ஏழு எதிர்க் கட்சிகள் சேர்ந்து அமைத்துள்ள தேசிய மக்கள் முன்னணியின் தொடக்க விழா.

இம் மூன்று நிகழ்ச்சிகளையும் முப்பெரும் விழாவாக தி. மு. க. 16, 17 ஆம் திகதிகளில் கொண்டாடுகின்றது.

அதை ஒட்டி தி.மு.க தலைவர் கலைஞர் கருணாநிதி தமிழக மக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

வேண்டுகோளில் கலைஞர் கூறியிருப்பதாவது:

அனைவரும் சென்னை நோக்கி வருக! இருகரம் கூப்பி வரவேற்கிறேன்.

இரண்டு முழு நாட்கள் சென்னையில் தங்க உள்ளதேஎன்று உடன்பிறப்புக்கள் பெருமூச்செறிவதை அறியாமல் இல்லை.

என் செய்வது! பணம் கொடுத்து ஆள் சேர்த்து பவனி நடத்தும் பழக்கம் என்றைக்கும் நமது கழகத்திற்கு இருந்தது இல்லை.

நீ உண்டியல் எடுத்து, கையேந்தி பட்டி தொட்டிகளில் பம்பரமாகச் சுழன்று திரட்டித் தந்த சிறு துளிகள் பெருவெள்ளமென உருவெடுத்து சம்பிரமாக நிமிர்ந்து நிற்கிறது அண்ணா அறிவாலயமாக!

அண்ணன் புகழ்பாடும் அந்த அழகு மாளிகையை எழுப்பிட எத்தனை எத்தனை தடைகள்!

ஆட்சிப் பொறுப்பில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஜனநாயகம் காத்திடவும் நாட்டின் பாதுகாப்புப் பேணிடவும் - தமிழ் மொழி தமிழின உணர்வு பண்பாடு போற்றிடவும் தி. மு. க. வின் பணி என்றென்றும் தேவை என்று அண்ணா தொடர்ந்து வலியுறுத்தி வந்ததை நெஞ்சிலிருத்தி நிமிர்ந்து நடை போடுவோம்!

எதேச்சாதிகாரம் தலையெடுக்காமல் தடுத்திடுவோம் என முழங்கிடுவோம்.

கழகக் கண்மணியே! காலைக்கதிர் போல உன் தகத்தாய முகம் காட்டி வந்திடுக. சென்னை நோக்கி! வரவேற்பேன் நான் உன்னை இருகரம் கூப்பி!!

இப்படி கலைஞர்தனது அழைப்பில் தெரிவித்திருக்கிறார். (எ)

## கைலாசநாத பிள்ளையார்...

(5ஆம் பக்க தொடர்ச்சி)

முயற்சியினால் இச் சிவ விக்கிரகம் சஞ்சாவூர் சோமசுந்தரச் சபரிமூலம் வடிக்கப்பட்டதாகும்.

பஞ்சமுக விநாயகர் ஈழத்தில் முதல் முதல் எழுந்தருளிய தலமாம் கைலாய நாதப் பிள்ளையார் கோயிலே என்ற சிறப்பும் கிடைத்தது.

### மூன்றாவது முறை கும்பாபிஷேகம்

1970 ஆம் ஆண்டு மூன்றாவது முறையாகக் கும்பாபிஷேகமும் நடைபெற்றது. இதனை முன்னின்று முடித்து வைத்தவர் சர்மாக் குருக்களே யாவார்.

எனவே சுருங்கக் கூறின் புராதன தமிழ் மன்னர்களால் உருவாக்கப்பட்டு, அன்னிய சமயத்தவரான போத்துக்கேயரால் இடிக்கப்பட்டு ஒல்லாந்தரால் இருந்த இடம் மறைய அகற்றப்பட்டு, ஆங்கிலேயரது அரைவாசிக் காலம் சென்ற பின்னர் புனருத்தாரணப் பணிகள் புதிதாகப் படிப்படியாக ஆரம்பிக்கப்பட்டு சுதந்திர இலங்கை உருவான பின்னரே திருப்பணிகள் அனைத்தும் இனிது நிறைவு எய்தின எனலாம்.

### மீண்டும் அழிவு

ஐங்கரத்தான் அப்பன் ஆற்றும் அருந்தொழில்களில் ஒன்று அழித்தல்.

மீண்டும் ஆலயத்துக்கு அழிவு 1987 ஆம் ஆண்டு ஏற்பட்டது.

அன்னியமதத்தார் அழித்தது போல் அயல் நாட்டுசமாதானவிரும்பிகளின் ஷெல் தாக்குதல்களினால் மீண்டும்ஆலயத்திற்கு அதன் சூழலிற்கும் பேரழிவு ஏற்பட்டது.

ஓடுகளும், கற்களும், மரங்களும்கோவிற்தரை தெரியாது மூடின. வெளி வீதியில் இரத்தவெள்ளமும் மரண ஒலமும். வேதம் ஒலிக்க வேண்டிய இடத்தில் வேதனைக் குரல்கள் ஒலித்தன.

மூல மூர்த்தியினதும் பரிவார தெய்வங்களினதும் ஸ்தூபிகளின் சிதைவுகளும். சிற்பங்களும் வீதியில் சிதறிக் கிடந்தன. நால்வருக்கான ஆலயம் வானம் பார்த்த பூமியாக வெட்டவெளிப் பந்தலில் குரவர்கள் நால்வரும் கூடி நின்றனர்; நவக்கிரக மண்டபமும் இதே நிலையில்; வாகனங்கள் உருமாறி வாகனச்சாலையோ மரக்கிறகு மரக்காலையோ எனஏங்க வைத்தது; கொடி மரமில்லை, ஸ்தம்ப மண்டபமும் உள் வீதியும் ஓடுகள் அற்று கூரை மரங்கள் தோரணங்கள் போல் தொங்கின; மடப்பள்ளியும், களஞ்சிய அறையும் இடம் தெரியாது உருக்குலைந்திருந்தன; தேரும், தேர் முட்டியும் உடைவினை உள்ளடக்கியிருந்தன. கோபுர வாசலில் குண்டுகள் புதுப் புதுச் சிற்பங்களை உருவாக்கியிருந்தன; குருக்களது இல்லமும் சேதமுற்றது சுற்று மதில் சுற்றிலும் வாயில்கள் காணப்பட்டன. மின்சார இணைப்புக்கள் அலங்காரச் சித்திரங்கள் திரைச் சீலைகள் கதவுகள் ஒன்றுடன் ஒன்று இணைந்தாற் போல் புது வடிவம் தந்தன.

இத்துணை அழிவுற்ற ஆலயத்தை மீண்டும் புனரமைக்க இந்தக் கும்பாபிஷேகம் வழி வகை செய்யும்.

### விலை அதிகரிப்பு

கொடிகாமம், செப். 15

கொடிகாமச் சந்தையிலும் கடைகளிலும் நாட்டரிசி விலை ஏறுகிறது. (இ-72)

## ஈழத்தில்.......

(4ம் பக்கத்தொடர்ச்சி)

திருவண்ணாமலை (நெருப்பு), திருவானைக்கா (நீர்) திருவாரூர் (நிலம்) காளத்தி (வாயு) என்னும் ஸ்தலங்களில் இருந்தும்-

சபை ஸ்தானங்களான சிற்சபை பொன்னம்பல கனகசபை எனப்படும் சிதம்பரம், இரத்தினசபை என்று கூறப்படும் அரக்கோணத்திலுள்ள திருவாலங்காடு. வெள்ளியம்பலம் அல்லது பதி என்று சொல்லப்படும் ரஜத சபை-மதுரை சுந்தரேஸ்வரர், தாமிரசபை என்று சொல்லப்படும் திருநெல்வேலி நெல்லையப்பர், சித்திர சபை என்று அழைக்கப்படும் திருக்குற்றாலகுற்றலநாதர் என்னும் ஆலயங்களில் இருந்தும்-

அஷ்டவீரட்டாணம் எனப்படும் திருக்கண்டியூர், திருக்கோவிலூர், திருவதிகை, திருப்பறியலூர், திருவிர்குடி, வழுவூர், திருக்குறுக்கை, திருக்கடவூர் ஆகிய தலங்களில் இருந்தும்-

சப்த (ஏழு) இடங்கள் எனப்படும் திருவாரூர், திருவிர்குடி, திருநள்ளாறு, திருநாகைகாரோணம், திருக்காரையூர், திருக்கோழிலி, திருவாய் முன் திருமறைக்காடு என்னும் கோயில்களில் இருந்து-

சப்த தஸ்தான தோத்ரங்கள் எனப்படும் திருவையாறு, திருப்பட்டினம் திருச்சோற்றுத் துறை, திருவேதிக்குடி, திருக்கண்டியூர், திருப்பூந்திருத்தி, திருநயத்தானம் என்னும் ஸ்தலங்களில் இருந்தும்-

திருவெண்காடு (திருவையாறு) திருமயூரம் (திருவிடைமருதூர்) திருச்சாய்க்காடு (திருவாஞ்சியம்) என்னும் திருக்கோயில்களில் இருந்தும்-

தீர்த்தங்கள் கொண்டு வரப்பட்டு மகா கும்பாபிஷேகத்தின் போது மூர்த்திகளுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

இது ஈழத்தில் நடைபெறும் கும்பாபிஷேகங்களில் இருந்தும் தனித்துவத்தைப் பெறும் ஒரு அபூர்வ நிகழ்வாகும்.

இன்றைய கும்பாபிஷேகக்கிரியைகளை நியாய சிரோமணி சி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் தலைமையின் கீழ் பேராசிரியர்கள் கைலாசநாதக்குருக்கள், வியாகரண சிரோமணி சிவஸ்ரீ பூரணதியாகராஜாக்குருக்கள், சிவஸ்ரீ சந்திரசேகரக் குருக்கள், சிவஸ்ரீ கைலாசநாதக் குருக்கள் ஆகியோரும் இன்னும் ஈழத்து சிவாச்சாரியார்கள் பலரும் சேர்ந்து நடத்திவைப்பார்கள்.

## தந்தையும்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

விசேடம் என்னவென்றால் தந்தையும் தனயனும் ஒன்றாகவிருப்பது தான். இரண்டு மூலஸ்தானத்தில் இருந்து- கைலாச நாதராக சிவபெருமானும், கைலாச பிள்ளையாராக விநாயகரும் வீற்றிருந்து திருவருள் பாலிக்கின்றனர்.

இந்திரன் குறை போக்க "காவிரி" நதியை உற்பத்தியாக்கியவரும், மகாபாரதக் கதையை மேரு மலையில் எழுதியவரும், அவசரமாகப் பூஜை செய்த ஒளவையை திருக்கைலாயத்திலே சேர்த்தவரும், திருமாலுக்கு சக்கரத்தை அளித்தவரும் ஆகிய ஆபத்பாந்தவராகிய ஸ்ரீ கைலாசநாதரை வணங்கி, தாள் பணிந்து, அடி தொழுது மலரடி பணிவோமாக.

## யாழ்.பல்கலைக் கழகத்திலிருந்து
## வணிக நிர்வாகமாணி பரீட்சையில் சித்தியடைந்தோர்

யாழ்ப்பாணம் செப் 15

யாழ் பல்கலைக்கழகத்திலிருந்து 1987 ஆம் ஆண்டிற்கான வணிக நிர்வாக மாணிப் பரீட்சை (பகுதி III) யில் சித்தியடைந்தோர் விபரம் வருமாறு:-

எம். எல் அப்துல் காதர், எம் ஏ. அப்துல் முலாவ்வர், எம். இஸ்மெயில் அன்சார் கே. பரதன், செல்வி என். சந்திரிக்கா.

பி. சந்திரர், செல்வி எஸ். எவ். லெற்றீசியா, ரி. ஜீவராஜா, செல்வி பி. ஜீவரஞ்சனி, கே. ஜெகநாதன், ஆர். எஸ். ஜெகராஜன்.

செல்வி பி. ஜெயகௌரி, கே. கலாகரன், எம். குகதாசன், செல்வி கே. லலித்தமலர், எம். லோசிங்கம். ஏ. முகமது அஜ்வாட், ஏ. எச். முகமட் அன்சார்.

எம். எம். எம் குசேயின்உன், எம். முகமட் நாஜ்மீ, எம். முகமட் றிஸ்வி, எம். ஐ. எம் சவீக், பி. நடராஜா, எஸ் நடராசா.

ஏ. சி. முகமட்நவீல், எம். ஏ. நஜீட் அகமத், ரி. நந்தகுமாரன், எம். ஐ. நவார், செல்வி ரி. லீலலோஜினி.

எஸ். நேசராஜா, சின்னத்தம்பி நேசராசா, எஸ். பரமதாசன், எஸ். பாஸ்கரன், பி. பத்மநாதன், செல்வி எம். றிவ்வா உம்மா.

என். இராஜேஸ்வரன், கே. றவீந்திரன் என். றவிசந்தர், எஸ். றவிச்சந்திரன், கே. சபேசன்.

எம் ஐ. முகமட் சைபுதீன், வி. சண்முகராசா, எஸ். சரவணபவான், ரி. சிவகுமாரன்

செல்வி சி. சிவராங்கி எஸ் ஸ்ரீரங்கநாதன், எஸ். சிததரங்கதன், எம். எஸ். முகமட் சியான், கே. ஸ்ரீ விக்னேஸ்வரன். ஜி. சும்வந்திரன், ரி. திருக்குமரன்.

செல்வி ரி. உமாதேவி, ஆர். உமாகாந்தன், ஏ.கே. முகமட்உதுமான், கே. வைத்துலா, செல்வி எஸ். யோகேஸ்வரி, வி. யூசுப்.

ஏ எம். றோய்பர்ஷுந்து, செல்வி கே. மாலினிதேவி, இ. மணிவண்ணன், செல்வி எஸ். மேரிஸ்ரெல்லா ஏ டி மதிவதனன், என். முரளீதரன்.

ஆர். ஜி. ரகுராகவன், ஏ.எம். இராஜ்குமார், ஜே ஏ. ரவீந்திரன், செல்வி ஆர். கணேசன், செல்வி பி. சிவானி, செல்வி ஏ. சிவசுப்பிரமணியம்.

ஆர். தயாளன், என். தயாபரன், செல்வி ரி. அம்பலவாணர், எஸ் திருநேசன், எஸ். திருபாகரன், கே. விசாகுலன், திருமதி சி. இராஜசிங்கம்.

(நானசித்தி) (ஓ-ச)

### இன்று சதுர்த்தி

யாழ்ப்பாணம், செப் 15

அத்தியடி வீரகத்தி விநாயகப் பெருமான் ஆலயத்தில் இன்று சதுர்த்தித் திருவிழா நடைபெறும்.

ஆலய மூலமூர்த்திக்கு காலை பத்து மணிக்கு விசேஷட அபிஷேகம் நடைபெறும்.

மாலை நாலரைமணிக்கு விநாயகப் பெருமான் மணவாளக் கோலமாக எழுந்தருளி திருவூஞ்சலில் அமர்ந்து திருவூஞ்சல் காட்சிஇடம்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சேட்டிங்ஸ் ★ சூட்டிங்ஸ்
★ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
★ றெடிமேட் ஆடைகளுக்கும்
சிறந்த இடம்

மயூரா சென்ரர்
13 B, நவீனசந்தை. :-: யாழ்நகர்.



# உதயன்

15 - 09 - 1988 வியாழக்கிழமை



திருமண வைபவங்களுக்கேற்ற
★ மணிப்புரி
★ காஞ்சிபுர ★ பெனரஸ்
சேலைகளைப் பெற்றுக்கொள்ள

மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, :-: யாழ்நகர்.


### இன்று முதல்....

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

உரிமைகளும் இன்று வரை தமிழீழ மக்களுக்கு வழங்கப்படவேயில்லை.

திலீபனின் கனவுகள் நனவாகவேண்டுமாயின்- தமிழீழ மக்களின் உரிமைகள், அபிலாஷைகள் நிறைவேறவேண்டுமாயின்- மக்கள் கிளர்ந்தெழுந்து போராடுவதன் மூலமே அவற்றை நாம் அடையமுடியும்- என்று உள்ளது.

(அ-10)

### ஜே.வி.பி....

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

நடத்தி தங்கள் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கும் பட்சத்தில், தாங்கள் ஆயுதங்களைக் கைவிட்டு அரசியல் நீரோட்டத்துக்கு திரும்பத் தயாராக இருப்பதாகக் கூறினர்களாம்.

பின்னர் சம்பந்தப்பட்ட அரசியல்வாதி ஜே. வி. பி. யினரின் கோரிக்கைகள் சம்பந்தமாக ஜனாதிபதியுடன் பேசியதாகவும், அவரும் சில விடயங்களில் ஜே. வி. பி. இயக்கத்தினருடன் சமரசத்துக்கு வர விருப்பம் கொண்டிருப்பதாகவும் அறியப்படுகிறது.

அரசுடனும்,ஜே.வி.பி. யினருடனும் கடந்த ஒரு மாத காலமாக சம்பந்தப்பட்ட அரசியல்வாதி பேசி வருவதாகவும், இன்னும் ஒரிரு வாரங்களில் இது சம்பந்தமாக ஒரு தீர்க்கமான முடிவு தெரிந்து விடும் என நம்பப்படுகிறது.

(அ-3)


## பதவி வெற்றிடம்

18 — 25 வயதிற்குட்பட்ட பெண்கள் பெக்கிங் வேலைக்கு உடனடியாகத் தேவை. நேரில் வரவும்.

பவானி விலாஸ்,
32/1 கல்லூரி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

(6490)


### இன்று காலை,..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரூர்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட மாகாணசபை ஒன்றினால்தான் தமிழர்களின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்ய முடியும்—

இப்படி அந்த அரசு அதிகாரி தெரிவித்தார்.

இந்தியத் தரப்பில் யுத்த நிறுத்தம் அறிவிக்கப்பட வேண்டும் என்று அன்னை பூபதி இவ்வருடம் ஏப்ரல் மாதம் உண்ணாவிரதம் இருந்த காலம் தொட்டு தமிழ் மக்களின் பல பொதுஸ்தாபனங்களும், அரசியல் பிரமுகர்களும் கோரி வந்தனர்.

இந்திய அமைதிப் படை உயர் அதிகாரிகள் பொதுமக்களை அழைத்துப் பேசிய போதெல்லாம் இந்தியத் தரப்பில் யுத்த நிறுத்தத்தையே வலியுறுத்தி வந்தார்கள்.

தமிழகத்திலும், டில்லியில் எதிர்க்கட்சி வட்டாரங்கள் மட்டத்திலும் முதலில் இந்தியத் தரப்பில் யுத்த நிறுத்தம் அறிவிக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

கடந்த சுமார் ஒரு மாதகாலமாக, இந்தியா யுத்தம் நிறுத்தம் செய்தால் போராளிகள் சாதகமான நிலைக்கு வருவார்களா என்பதை அறிவதற்கு அமைதிப் படை தரப்பில் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன- மாநாடுகள் நடத்தப்பட்டன.

இம்மாத ஆரம்பத்தில் நிலைமை மேலும் முன்னேறி யுத்தநிறுத்த அறிவிப்பு வருவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகரித்து வந்தன.

#### உதயன் சொன்னது

இந்தியதரப்பில் யுத்த நிறுத்தம் எந்த நேரமும் அறிவிக்கப்படலாம் என்ற ஒரு நிலை உருவாகி இருப்பதாக எல்லாப் பத்திரிகைகளையும் முந்திக் கொண்டு உதயன் இம்மாதம் பதினேராம் திகதி செய்தி வெளியிட்டிருந்தது வாசகர்கள் அறிந்ததே.

(அ-எ)

### போக்குவரத்து...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மரணமானதை கண்டித்தும் ஜே. வி. பி இயக்கத்தினர் ஹர்த்தால் ஒன்றிற்கு அழைப்பு விடுத்திருந்தனர்.

இந்த ஹர்த்தால் காரணமாகவும், நேற்று முன்தினம் வவுனியாவில் நடைபெற்ற ஹர்த்தால் காரணமாகவும் இந்த பஸ் சேவை ஸ்தம்பிதம் அடைந்திருந்தது.

ஆனால் இந்த ஹர்த்தால்கள் நேற்று விலக்கிக் கொள்ளப்பட்டதை அடுத்து பிரஸ்தாப பஸ்கள் யாழ்நகர் வந்து சேர்ந்தன. (ஒ-9)

## மரண அறிவித்தல்கள்

### வண. சாம் தம்பு

யாழ். ஆதீன தென்னிந்திய, சாவகச்சேரி திருச்சபையின் போதகர் வண. பிதா. சாம் தம்பு அவர்கள் 12-09-88. திங்கட்கிழமை மறுமைக்குள் பிரவேசித்துள்ளார். அன்னார் காலஞ்சென்ற மருதப்பு தம்புவினதும், ரேஸ் நாகம்மா (சங்குவேலி) வினதும் மகனும் லிடியா இராசமணி (Baby) இளைப்பாறிய ஆசிரியையினது அன்புக் கணவரும், செல்வி யோய்ஸ் சுகந்தி (ஆசிரியை மகளிர் கல்லூரி உடுவில்). தானியேல் ஜேகான் (மாலைதீவு), நோஎல் சுரேஸ் (சென்னை கிறிஸ்தவ கல்லூரி) ஆகியோரின் அருமைத் தந்தையும், காலஞ்சென்ற திரு. திருமதி சபாபதி (அளவெட்டி) ஆகியோரின் மருமகனும், காலஞ் சென்ற T. W. ஜெயரத்தினம், யேம்ஸ் தம்பு, திருமதி எமிலி சபாபதி, T. அருட்பிரகாசம் (U.K.), இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்), திருமதிகள் நேசம்மா சிங்கராசா, பாக்கியம் யோண் இராசா, ஞானம்மா, புனிதராசா, தவமணி கபிரியேற்பிள்ளை (ஆசிரியை சில்லாலை) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற தங்கராணி ஜெயரத்தினம், V. சபாபதி, மனோரஞ்சிதமலர் அருட்பிரகாசம், A. யோண்ராசா, E N. புனிதராசா, S. இராசரத்தினம் அவர்களினதும் வைத்திய கலாநிதி T. சிங்கராசா, திருமதி கருணவதி தம்பு (இளைப்பாறிய ஆசிரியை), திரு. P. கபிரியேற்பிள்ளை (G. S. சில்லாலை), திருமதி மனோன்மணிகுமரேசு, செல்வி நேசமணி சபாபதி, திருமதி ருக்மணி பெனடிக்ற் ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை 17-09-88 சனிக்கிழமை பி. ப. 2-30 மணிஅளவில் சாவகச்சேரி தேவாலயத்தில் நடைபெற்று, சாவகச்சேரி C.S.I. சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். உற்றார். உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
போதகர் அவர்களின் குடும்பத்தினர்.
[6496]

### திரு. காசிப்பிள்ளை கந்தையா

இளைப்பாறிய தலைமை ஆசிரியர் திரு. காசிப்பிள்ளை கந்தையா அவர்கள் நேற்று அதிகாலை புதன்கிழமை (14-09-88) அன்று காலமாகிவிட்டார். இவர் செல்லம்மாவின் அன்புக்கணவரும், காசிப்பிள்ளை, அம்பிகைபாகன், கனகசபை, ஆச்சிமுத்து,காலம் சென்ற வேதவனம் (ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். இவர் திரு.கு. வேலுப்பிள்ளை (இளைப்பாறிய நில அபிவிருத்தி அதிகாரி) என்பவரின் மாமனாரும், காலம்சென்ற மனோன்மணி அவர்களின் பெரிய தந்தையும், இரவீந்திரன் (U.K), சுரேந்திரன் (Saudi Arabia), தர்மகுமாரி, மனோகுமாரி,சோகிலகுமாரி, தெய்வேந்திரன் ஆகியோரின் பேரனும் ஆவார். டாக்டர் S. சிவகுமார் (U K), பொறியியலாளர் S. நந்தகுமார் (U.K) ஆகியோரின் அருமை மாமனாரும் ஆவார். இவர் திருமதி மோகனேஸ்வரி பாலசுப்பிரமணியம் (ஆசிரியை), திருமதி பவானி பாலராஜா (U.K) ஆகியோரின் பெரிய தந்தையும், செல்வி.பாலவேணி, செல்வன். பாலகஜன, விக்னு ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார். காலம்சென்ற திரு. நா. பரமேஸ்வரன், திரு. நா. நாகேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 15- 09- 88 இன்று வியாழக்கிழமை பி. ப 3. 00 மணிக்கு நுணுவில் மேற்கு காந்தாளம்பிட்டி மயானத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி அன்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி

தகவல்:
கா. அம்பிகைபாகன்
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)
சகோதரன்.

நுணுவில் மேற்கு,
சாவகச்சேரி.
( 6492 )

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### தாயகத்தின் சுதந்திரமே எங்கள் கொள்கை




வீரஜனனம்: 29 - 11 - 1963

வீரமரணம்: 26 - 09 - 1987

திலீபன்!
ஒரு வரலாறு; வழமையான வரலாறு அல்ல;
வரலாற்றில் அவன் ஒரு வரலாறு.
சாவு அவனிடம் தோற்றது — காரணம்
சாவு அவனை நோக்கி வரவில்லை— அந்த
வீரமகன் சாவை நோக்கி சென்றான்
ஏன்? யாருக்காக?
தன் இனத்தின் மீட்சிக்காக
வாழவேண்டிய இளம் வயதில் தன் வாழ்வை
தன் இனத்திற்காக அர்ப்பணித்தான்.
உயிரினும் தன் இலட்சியத்தையே பெரிதென மதித்தான்
எங்கெல்லாம் தமிழ் மக்கள் வாழ்கின்றார்களோ
எங்கெல்லாம் தமிழ்மொழி பேசப்படுகின்றதோ
அங்கெல்லாம் திலீபன் நிறைந்திருப்பான் அவர்கள்
—நெஞ்சங்களில்

-பருத்தித்துறை வர்த்தகர் சங்கமும்,
வடமராட்சி மக்களும்
(6653)


MACK TRAVEL AIR TRAVEL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 15- 09- 1988 இல் ... Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd292/2 Navalar Road, Jaffna on Thursday 15th September 1988